நாவாந்துறைப் புத்தகம்
மாநகர சபை; யாழ்ப்பாணம்

Saturday மெயில்
A Fascinating Weekly Bulletin
01 - 12
19-12-2009
பக்கங்கள்: 24
விலை: 15/=



# 19 வயதில் சிறை சென்றவருக்கு 54 வயதில் மரபணுச் சோதனை பெற்றுத்தந்த விடுதலை

1974 ஆம் ஆண்டில் 9 வயதுச் சிறுவன் ஒருவனைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவு செய்ததாகக் குற்றவாளியாகக் காணப்பட்டு கடந்த 35 வருடங்களாகச் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் அமெரிக்கர் ஒருவர் மரபணுச் சோதனைச் சான்றையடுத்து ( DNA evidence) நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

மரபணுச் சோதனையையடுத்து விடுதலை பெறும் மிகவும் நீண்டகாலச் சிறைக் கைதியாக இவர் விளங்குகிறார்.

ஜேம்ஸ் பெயின் என்ற இந்த ஆபிரிக்கர் அமெரிக்கா புளோறிடா மாநிலத்தில் சிறையில் இருந்து விடுதலையானதும் 'எனக்கு யார் மீதும் கோபமில்லை. கடவுள் மீதான எனது நம்பிக்கையே என்னைக் காப்பாற்றியது' என்று பி.பி.சி.க்கு தெரிவித்திருக்கிறார்.

தன்னை நிரபராதியென்று எப்போதுமே கூறிவந்த ஜேம்ஸ் பெய்னின் மேன்முறையீட்டையடுத்து அவரது வழக்கை மீளாய்வு செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மீளாய்வு விசாரணையின் இறுதி நாளன்று தனது விடுதலையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த அவர் 'குற்றமற்றவன்' (Not Guilty) என்ற வாசகம் பொறிக்கப்பட்ட ரீசேட்டை அணிந்தவாறே நீதிமன்றத்தில் ஆஜரானார்.

19 வயதில் சிறையில் அடைக்கப்பட்ட ஜேம்ஸ் பெயினுக்கு தற்போது 54 வயதாகிறது.

விடுதலையையடுத்து உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தான் இருப்பதாக பி.பி.சி.வேர்ள்ட் டுடேக்கு கூறிய அவர் தனது முதற் கடமை தாயைச் சென்று பார்ப்பதே என்று கண்கள் கலங்கிய நிலையில் கூறினார். நான் நன்றாக இருக்கிறேன். ஆனால், எனது தாயாரின் உடல் நிலை காரணமாக உடனடியாக அவரைச் சென்று பார்க்க வேண்டியிருக்கிறது. விடுதலையில் எனக்கு நம்பிக்கை இருந்ததைப் போலவே தனது மகன் குற்றவாளியல்ல என்பதிலும் என்றைக்காவது அவன் நிரபராதியென்று நிரூபிக்கப்பட்டு விடுதலை பெறுவான் என்பதிலும் அவரும் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். தாயார் என்றுமே நம்பிக்கை தளர்ந்ததில்லை. எனது குடும்பத்தின் ஆதரவும் எனது மத நம்பிக்கையுமே சோதனைகளைத் தாங்கிக் கொள்ளும் மனநிலையையும் விடுதலையையும் எனக்குப் பெற்றுத் தந்தது என்று ஜேம்ஸ் பெயின் தெரிவித்தார்.

'என்னை விடுதலை செய்வதற்கு இதுவே சரியான தருணமென்று கடவுள் நினைத்திருக்கிறார். இத்தருணத்துக்காக நான் பொறுமையுடன் காத்திருந்தேன். பாடசாலைக்குச் செல்ல முடியுமென்றும் எதிர்பார்க்கிறேன்' என்றும் அவர் கூறினார்.

(2ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண வாழ்வும் உள நலமும்

திருமண வாழ்வில் சகலதுமே மகிழ்ச்சியானதில்லை. ஆனால், பிரம்மச்சரியத்தில் எந்த மகிழ்ச்சியுமே இல்லை என்று கூறப்படுவதுண்டு.

திருமணம் செய்துகொள்வது ஆண்களுக்கும் பெண்களுக்கும் நல்லது என்றும் மனச் சோர்வு, ஏக்கம் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையாவது போன்ற தீய பழக்கவழக்கங்களை நாடும் போக்கு ஆகியவற்றைக்கும். ஆனால், திருமண உறவு முறிந்து போனவர்களை இந்தக் கோளாறுகள் கடுமையாகப் பாதிக்கக் கூடிய ஆபத்து இருக்கிறது என்றும் விஞ்ஞான ரீதியான ஆய்வொன்றில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

நியூஸிலாந்தின் ஒடாகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உளவியல் நிபுணர் கேற் ஸ்கொட் தலைமையில் (உலக சுகாதார நிறுவனத்தின் உலக உளநல ஆரோக்கியம் தொடர்பான மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு) 15 நாடுகளைச் சேர்ந்த 34,493 பேரைப் பயன்படுத்தி இந்த ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது.

பிரிந்துவாழ்தல், விவாகரத்து மற்றும் மரணத்தின் மூலமாகத் திருமண வாழ்வு முடிவுக்கு வருமிடத்து மனக்கோளாறுகள் ஏற்படக்கூடிய ஆபத்து அதிகமானதாக இருக்கும். குறிப்பாகப் பெண்கள் போதைப் பொருளுக்கு அல்லது மதுவுக்கு அடிமையாதல் உடலுக்குத் தீங்கை ஏற்படுத்தக்கூடிய நடத்தைகளில் ஈடுபடும் போக்கு அதிகரிக்கும். ஆண்களைப் பொறுத்தவரை அவர்களுக்குக் கூடுதலான மனச்சோர்வு ஏற்படும் என்று ஆய்வில் கண்டறியப்பட்டிருக்கிறது.

இந்த ஆய்வு கூடுதலான அளவுக்குப் பிரத்தியேகமானதாகவும் குறைபாடுகள் குறைந்ததாகவும் இருக்குமென்று கருதப்படக்கூடியதாக இருப்பதற்குக் காரணம், அதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஆட்கள் உலகின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்தவர்களாக இருப்பதும் மனச்சோர்வைப் பற்றிய விபரங்கள் மாத்திரமல்ல, ஏக்கம் மற்றும் போதைக்கு, மதுவுக்கு அடிமையாதல் போன்ற கெடுதியான பழக்கவழக்கங்கள் தொடர்பிலும் தரவுகள் பெறப்பட்டிருக்கின்றமையுமாகும் என்று ஸ்கொட் அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன், திருமணத்தினால் திருமணமாகாமல் இருப்பதினால் மற்றும் திருமண உறவு முறிந்துபோவதினால் என்ன நேரிடுகிறது என்பதையும் தங்களால் அவதானிக்கக்கூடியதாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

திருமணம் செய்யாதிருப்பதைவிடவும் திருமணம் செய்வதே இருபாலாரினதும் உள ஆரோக்கியத்துக்கு நல்லது. முன்னைய ஆய்வுகளில் திருமணம் செய்யாதிருப்பதால் கூடுதலான அளவுக்குப் பெண்களின் உள ஆரோக்கியமே பாதிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

முதல் திருமணம் முறிவடையும் சந்தர்ப்பங்களில் பெண்களை விடவும் குறைந்த அளவுக்கே ஆண்கள் மனச் சோர்வடையக் கூடிய சாத்தியங்கள் உண்டு. இதற்குப் பெண்கள் தங்கள் இல்லங்களில் பாரம்பரியமாக வகிக்கும் பாத்திரம் காரணமாயிருக்கிறது என்றும் ஆய்வு தெரிவிக்கிறது. ஆனால், படித்த பெண்கள் மனச் சோர்வடைவது குறைவு என்று உலக உள நல ஆரோக்கிய ஆராய்ச்சியில் தெரிவிக்கப்படுகிறது.

திருமண உறவு முறிவடையும் போது அல்லது முடிவுக்குவரும் போது இருபாலாரிலும் அதனால் ஏற்படுத்தப்படுகின்ற எதிர்மறையான தாக்கங்களே திருமணத்தைப் பொறுத்தவரை காணப்படக்கூடியதாக இருக்கின்ற பெரும் பின்னடைவான ஒரு அம்சமாகும் என்று ஒடாகோ பல்கலைக் கழக ஆய்வு கூறுகிறது.

திருமண உறவு ஆண்களுக்கும் பெண்களுக்கும் பெருமளவு உளநல ஆரோக்கிய நன்மைகளைக் கொடுக்கிறது. திருமண உறவு முறிவடைவதனால் ஏற்படக்கூடிய மனச்சோர்வும் ஏக்கமும் மனக்கோளாறுகளினால் இருபாலாரும் பாதிக்கப்படக்கூடிய ஆபத்துகளைத் தோற்றுவிக்கும் என்பதே மேற்படி ஆய்வின் மூலம் நிறுவப்படும் உண்மையாகும் என்று ஸ்கொட் கூறினார்.

பிரிட்டனில் வெளியாகும் *Psycological Medicine* என்ற சஞ்சிகையில் இந்த ஆய்வின் விபரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டன. ஆய்வுக்கு ஹாலார்ட் பல்கலைக்கழகமும் பல்வேறு சர்வதேச அமைப்புகளும் உதவிபுரிந்தன.

---

**19 வயதில்...**

(முன்பக்கத் தொடர்ச்சி)

தனது வழக்கு மீள் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்றும் மரபணுச் சோதனை நடத்தப்பட வேண்டுமென்றும் பல மனுக்களை ஜேம்ஸ் பெயின் தாக்கல் செய்திருந்தார்.

Innocence Project என்ற தொண்டர் நிறுவனமே பெயினின் விடுதலை தொடர்பான ஏற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை வழங்கியது.

அமெரிக்கா பூராவும் மரபணு சான்று மூலமாக விடுதலை பெற்ற 246 சிறைக் கைதிகளில் ஜேம்ஸ் பெயின் தான் மிக நீண்டகாலம் சிறைத் தண்டனையை அனுபவித்தவர் என்று அந்த நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

1974 சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுவன் அடையாள அணிவகுப்பின் போது காட்டிய அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டே ஜேம்ஸ் பெயின் குற்றவாளியாகக் காணப்பட்டார். அந்தக் காலகட்டத்தில் செய்யப்படக் கூடியதாக இருந்த சோதனைகள் குற்றச் செயலில் ஜேம்ஸ் பெயினுக்கு தொடர்பிருப்பதாக நிரூபிக்கவில்லையென்ற போதிலும் அவருக்கு தண்டனை வழங்கப்பட்டது.

குற்றச் செயல் இடம்பெற்ற வேளை தனது இரட்டைச் சகோதரிகளுடன் சேர்ந்து வீட்டில் தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருந்ததாக ஜேம்ஸ் பெயின் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிப்பற்றாக்குறையின் மத்தியிலும் சமூகப் பணிகளை முன்னெடுக்கும் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் என்பது வட மாகாணம் முழுவதையும் இணைத்துச் செயற்பட்டு வருகின்ற ஒரு பேரமைப்பாக இருந்தாலும் தற்போதைய சூழ்நிலையில் அதன் சமூகப் பணிகள் யாழ்.குடாநாட்டுடன் மட்டுப்படுத்தப்பட்டதொன்றாகவே இருந்து வருகின்றது. புற்றுநோயாளர்களுக்கு அன்பளிப்பு வழங்குதல், படித்து விட்டு உயர்தரக் கல்வி வாய்ப்பின்றியிருக்கும் யுவதியருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுடன் இலவச தையற்பயிற்சி வகுப்புக்களை நடத்துதல், மது ஒழிப்பு பிரசார நடவடிக்கை, கல்வியில் சாதனை புரிந்த மாணவர்களுக்கு பரிசளித்துப் பாராட்டுதல் உள்ளிட்ட பல சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றதென்று வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் செயலாளர் செ.குமாரசிங்கம் தெரிவித்தார்.

இந் நிறுவனத்தின் பணி தொடர்பாக **Saturday** *மெயி*லுக்கு அவர் அளித்த செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அளித்த செவ்வியின் முழு விபரமும் வருமாறு;

**வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது எப்போது?**

1972 ஆம் ஆண்டு ஏற்கனவே சங்கானை மற்றும் காரைநகர்ப் பிரதேசங்களில் இயங்கி வந்த நல்லொழுக்க சங்கங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பக்கான் நல்லொழுக்க சம்மேளனம். இதற்கென அப்போது காரைநகரில் தலைமைக் காரியாலயம் ஒன்று திறக்கப்பட்டு செயற்பட்டு வந்தது. இதன் முதல் தலைவராக ஆசிரியர் அ.அரியரத்தினம் செயற்பட்டு வந்தார். இவ்வமைப்பு மெல்ல மெல்ல தனது செயற்பாடுகளை யாழ்.குடாநாடு தழுவிய ரீதியில் விரிவுபடுத்தி இன்று வடமாகாணம் முழுவதும் விஸ்தரித்து செயலாற்றி வருகின்றது. இது 1987களின் பின்னர் போரூட் நிறுவனத்துடன் இணைந்து அளப்பரிய சமூகப் பணிகளை மேற்கொண்டு வந்தது. எனினும், 1995 களில் பின் தனித்து– சுயமாகவே நின்று சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. இதன் தலைமையகம் காரைநகரிலிருந்து மாற்றப்பட்ட பின் வலிமேற்கில் சுழிபுரம், சித்தங்கேணி உள்ளிட்ட பல இடங்களிலும் இயங்கி, தற்போது சங்கானை பட்டின சபை வீதியில் இயங்கிவருகின்றது.

**வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் நோக்கம் மற்றும் அதன் பணிகள் பற்றி கூறமுடியுமா?**

எமது சம்மேளனம் ''மது விலக்கல், சமாதானம், சகோதரத்துவம், நல்லொழுக்கம் எனும் தாரக மந்திரத்தை அடிநாதமாகக் கொண்டு மக்கள் மத்தியில் சண்டை – சச்சரவுகளை நீக்கி மது அடிமையிலிருந்து நீங்கிய சமாதானம் மிக்கதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு அயராது பாடுபட்டு வருகிறது. இதற்காக சகல மட்டங்களிலும் மது ஒழிப்பு புகைப்பொருள் விலக்கல் போன்ற பிரசாரங்களை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது. பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், வைத்தியசாலைகள் எனப் பல இடங்களுக்கும் சென்று பிரசாரப் பணிகளை முன்னெடுப்பதுடன் கிராமிய மட்டங்களிலிருந்து இளைஞர், யுவதிகளை தலைமை அலுவலகத்திற்கு அழைத்து அவர்களுக்குப் பல்வேறு விழிப்புணர்வுக் கருத்தமர்வுகளையும் நடாத்தி வருகின்றோம்.

மேலும் சர்வதேச தினங்களான புகைப்பொருள் எதிர்ப்பு தினம் [மே- 31], போதைப்பொருள் எதிர்ப்பு தினம் [யூன்-26], நல்லொழுக்க தினம் [அக்டோபர் – 03] ஆகிய தினங்களை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையே கவிதை, கட்டுரை, ஓவியம் போன்ற போட்டிகளை நடத்தி அவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம்.

இதேவேளை, வருடம் ஒரு பாடசாலையை தெரிவுசெய்து அங்கு நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் மாணவர்களை கௌரவிப்பதோடு பரிசில்களையும் வழங்கிவருகின்றோம். அத்தோடு வைத்தியசாலைகள், பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் அப்பகுதி பொது மக்களையும் அயற்பிரதேச மக்களையும் திரட்டி சிரமதானப் பணிகளை முன்னெடுப்பதன் ஊடாக அவர்கள் மத்தியில் சமாதானம், சகோதரத்துவம், ஐக்கி[illegible] [illegible] வருகின்றோம்.

> **வடமாகாணம் முழுவதும் சேமிப்புத் திட்டங்களை விரிவுபடுத்தி சேமிக்கப் பழகும் சமுதாயம் ஒன்றை முழு வீச்சில் கட்டியெழுப்ப வேண்டும்**

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கல்வி கற்கும் ஆர்வம் கொண்ட மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்குவதுடன் அவர்களுக்கு அறநெறி வகுப்புகளையும் நடத்தி வருகின்றோம்.

வறிய மக்கள் மத்தியில் சேமிப்பு பழக்க வழக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் கிராமிய மட்டங்களில் சிறு சிறு குழுக்களை அமைத்து அக்குழுக்களுக்கூடாக சேமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். எல்லாவற்றுக்கும் மேலாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் வாழ்வாதார மேம்பாடு கருதி பால்மா மற்றும் பணம் ஆகியவற்றை வழங்கிவருகின்றோம். இவ்வாறு சம்மேளனத்தின் சமூக நலத்துறைப் பணிகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

**வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் மேற் குறித்த பணிகளுக்கு நிதி மற்றும் பொருட்கள் கிடைக்கும் வழிமுறைகள் பற்றிக் கூறுவீர்களா?**

நிதி என்று குறிப்பிடுகின்றபொழுது சம்மேளனத்தைப் பொறுத்தவரை பெரிய நிதி வளம் படைத்த ஒரு அமைப்பு என்று யாரும் கூறிவிட முடியாது. ஆயினும் குறைந்த நிதிவளத்துடன் நிற்பினும் சமூகத்தில் நிறைந்த சேவையை வழங்க வேண்டுமென்பது தான் சம்மேளனத்தின் இலக்கும் – இலட்சியமும் ஆகும்.

தற்போது கொழும்பிலுள்ள அடிக் (ADIC) என்ற நிறுவனம் எமது சம்மேளனச் செயற்பாடுகளுக்கென ஒருதொகை நிதியை ஒதுக்கித் தருகிறது.

உண்மையில் அந்நிதியை மட்டும் பயன்படுத்தி சம்மேளனத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது. கூடவே அவ்வப்போது சமூகப் பெரியார்கள், வர்த்தகப் பிரமுகர்கள், கிடைக்கும் அன்பளிப்புகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலதரப்பட்டவரிடமிருந்து கிடைக்கும் நிதிமூலம் சமூக அபிவிருத்திப் பணிகள் தொடர்கின்றன. இவை அவ்வப்போது கிடைத்து அவ்வப்போதே அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதால் சம்மேளனத்திற்கென்று நிரந்தர நிதியம் ஒன்றை உருவாக்க வேண்டியுள்ளது. அப்பொழுதுதான் எதிர்காலத்தில் எமது சமூக அபிவிருத்திப் பணிகளை விரிவுபடுத்தி நின்று நிலைக்கும் பணிகளை முன்னெடுக்க முடியுமென்று நான் நம்புகின்றேன்.

**எதிர்காலத்தில் நீங்கள் முன்னெடுக்கவிருக்கும் திட்டங்கள் என்ன என்பது குறித்து கூறமுடியுமா?**

வடமாகாணம் முழுவதும் சேமிப்புத் திட்டங்களை விரிவுபடுத்தி சேமிக்கப் பழகும் சமுதாயம் ஒன்றை முழு வீச்சில் கட்டியெழுப்புதல், பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு தொழில் முயற்சி எதுவுமின்றி வீடுகளிலிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தையல், கணினி போன்ற பயிற்சி நெறிகளை அறிமுகப்படுத்தி அவர்களின் முன்னேற்றத்துக்கு உதவுதல்.

சேமிப்பில் ஈடுபடும் மக்களுக்கு சுழற்சிமுறையில் கடன் திட்டங்களை வழங்கி சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்தல். உதாரணமாக பெறும் கடன் நிதியை பிரயோசனமற்ற முறையில் செலவு செய்யாது ஆடுவளர்ப்பு, கோழிவளர்ப்பு, வீட்டுத்தோட்டம் போன்ற பயன்மிக்க தொழில் முயற்சிகளை முன்னெடுக்க வகைசெய்தல்.

வறுமைக் கோட்டின் கீழுள்ள பின்தங்கிய கிராமங்களில் கள ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு அவற்றின் மூலம் இனங்காணப்படும் பாடசாலை செல்லாத – பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்து கல்வி கற்க வழிசெய்தல். வறுமைக்கோட்டின் கீழ் இருந்து கல்வியில் ஆர்வம் காட்டும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டங்களை அறிமுகம் செய்தல்

ஒரு மனிதனின் கல்விக்கு அடிப்படையாக அத்திபாரமாக முன்பள்ளிகள் அமைகின்றன. இத்தகைய முன்பள்ளிகள் இல்லாத கிராமங்களை இனங்கண்டு அங்கு முன்பள்ளிகளை நிறுவி பாலர் கல்வித் திட்டங்களை முன்னெடுப்பது போன்ற பல திட்டங்களை வகுத்து வைத்திருக்கின்றோம். எனினும் இவை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக முதுகெலும்பாக நிதி மூலம் அவசியமாகின்றது. எனவே, சம்மேளனத்தால் முன்னெடுக்கப்படவிருக்கும் சிறந்த சீரிய சமூக அபிவிருத்திப் பணிகளுக்கு தனவந்தர்கள் – தாராள மனம் படைத்தவர்கள், கருணை உள்ளங்கொண்டவர்களிடமிருந்து நாம் நிதியுதவிகளை எதிர்பார்க்கிறோம்.

**எஸ்.எஸ்.ரூபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் இலவச கல்வி முறைக்கு முடிவுகட்டி வரும் பாடசாலைகள்

கல்வியில் சிறந்து விளங்குகின்ற யாழ்.மாவட்டத்தில் இன்று இலவசக் கல்வி ஒழிப்பு முறை தோற்றம் பெற்றுள்ளமை குறித்து பெற்றோர்கள் பலரும் தமது கவலையை வெளியிட்டு வருகின்றனர்.

யாழ். நகரிலுள்ள தேசியப் பாடசாலைகள் உட்பட பல



பாடசாலைகளில் புதிதாக மாணவர்களை அனுமதிப்பதற்குப் பெருந்தொகைப் பணத்தைச் செலுத்துமாறு பெற்றோர்கள் வற்புறுத்தப்படுகின்றனர். பணம் செலுத்த மறுத்தால் கல்வி கற்பதற்கான அனுமதி மறுக்கப்படுகின்றது. இதனால் ஏராளமான மாணவர்கள் பாதிக்கப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகிய இலங்கையில் இலவசக் கல்வி நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர என்ற பெரும் மனிதர் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக இன்று நாட்டில் பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி முறை அமுல்படுத்தப்படுகின்றது.

வசதி இல்லை என்ற காரணத்துக்காக எந்தவொரு மாணவனோ மாணவியோ கற்றலை நிறுத்தக்கூடாது.கல்வி கற்காமல் இருக்கக்கூடாது என்ற காரணத்தாலேயே இலவசக்கல்வி முறை அமுல்படுத்தப்பட்டது. இது தவிர கல்வியறிவை ஊக்குவிப்பதற்காகப் பாடசாலைகளில் பல்வேறு சட்டதிட்டங்களும் கடைப்பிடிக்கப்படுகின்றன.

அதாவது, வசதியான மாணவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான ஆடையணிந்து'செல்லும்போது வசதியற்ற மாணவர்கள் அவற்றைப் பார்த்து தாழ்வு மனப்பான்மைக்குள்ளாகி கல்வியில் பின்னடைவு ஏற்படக்கூடாதென்பதற்காக ஆடை விடயத்தில் பொதுத்தன்மை கொண்டுவரப்பட்டது.

இதன்மூலம் பெண்களுக்கு முழுநீள வெள்ளை ஆடையும் ஆண்களுக்கு வெள்ளைச் சேர்ட் மற்றும் அரைக்காற்சட்டையும் நடைமுறைப்படுத்தப்பட்டது.உயர் வகுப்பு மாணவர்களுக்கு வெள்ளைச் சேர்ட் உடன் வெள்ளை நீளக்காற்சட்டையும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாணவிகள் காதில் அணியும் தோடுகளைத் தவிர வேறெந்த ஆபரணங்களையும் அணிந்தவாறு பாடசாலைக்குச் செல்லக்கூடாதென்றும் உத்தரவிடப்பட்டிருக்கின்றது. அனைத்து மாணவர்களுக்கும் சமமான கல்வியை வழங்கக்கூடிய உயரிய நோக்குடனேயே இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

'ஆனால், வசதி படைத்த மாணவர்களுக்கு மட்டுமே கல்வி உரியதென்ற வரையறையை உருவாக்கக்கூடியதாக யாழ். நகரிலுள்ள பல பிரபல பாடசாலைகள் செயற்படுகின்றமை குறித்து பெற்றோர்கள் பலரும் தமது அதிருப்தியை வெளியிடுகின்றார்கள்.

தரம் 1 மற்றும் தரம் 6 போன்ற வகுப்புகளில் புதிதாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு அனுமதி பெறுவதற்காக மேற்படி பாடசாலைகளுக்குச் செல்கின்றபோது நன்கொடை என்ற பெயரில் பெருந்தொகைப் பணத்தைச் செலுத்துமாறு அவர்கள் கோரப்படுகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் பெற்றோருடன் பேரம் பேசும் செயற்பாடுகளும் நடைபெறுகின்றது.

பாடசாலையின் அபிவிருத்தி என்ற பெயரில் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஊடாகவே இந்தப் பெருந்தொகை நிதி அறவீடு செய்கின்ற விடயம் நடைபெறுகின்றது.

நகர்ப்புறப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் தேசியகல்விக் கொள்கைக்கு அப்பால் தனியார் பாடசாலைகளைப் போலவே அவை செயற்படுகின்றன. குறிப்பாக அரச உத்தியோகம் செய்கின்றவர்களின் பிள்ளைகள் மட்டுமே நகரப் பாடசாலைகளில் கல்வி கற்க முடியுமென்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில தனியார் பாடசாலைகளைத் தவிர ஏனைய அனைத்தும் அரசாங்கப் பாடசாலைகளாகவே உள்ளன. அரச பாடசாலைகள் அனைத்தும் தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்பவே தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதன்படி நோக்கினால் இலங்கை அரசியலமைப்பில் கூறப்பட்டிருக்கின்ற இலவசக் கல்வியைப் பெறுவதற்கு இந்த அரச பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்கள் அனைவரும் தகுதியுடையவர்கள்.

ஆனால், யாழ். நகர்ப்புறத்திலுள்ள பல பாடசாலைகள் ஏழை மாணவர்களுக்கு எட்டாதவையாகவே இருக்கின்றன.இவர்கள் இங்கே கல்வி கற்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த மாணவர்களை மேற்படி பாடசாலைகளில் சேர்ப்பதற்காகச் செல்கின்ற பெற்றோருடன் பாடசாலை நிர்வாகம் பேரம் பேசத் தொடங்குகின்றது. பெற்றோரின் நிலையைப் பொறுத்து பல்லாயிரக்கணக்கான ரூபாவில் ஆரம்பிக்கின்ற இந்தப் பேரம் பேசலானது 10 ஆயிரம் ரூபா வரை இறங்கி வருவதாகக் கூட சில பெற்றோர் கூறுகின்றனர். ஆயினும் இதனை விட பெருந்தொகை நிதியைப் பெறவே பாடசாலை நிர்வாகங்கள் முயல்வதாகக் கூறப்படுகின்றது.

இதில் கவலைக்கிடமான விடயம் என்னவென்றால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி நிலையங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பல மாணவர்கள் இந்தப் 'பிரபல' பாடசாலைகளில் இணையச்சென்ற போது அவர்களிடமும் பல்லாயிரக்கணக்கான ரூபா பணம் செலுத்துமாறு கோரப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு சென்றவர்களில் பணத்தைச் செலுத்த வசதியற்ற பெற்றோர்கள் பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

மாணவர்களை அனுமதிப்பதற்காகப் பெற்றோர்களிடம் பெருந்தொகை நிதியை அறவிடுகின்ற மேற்படி பாடசாலைகள் அதற்குக் கூறுகின்ற காரணம் 'பாடசாலையின் வளத்தையும் உள்ளீடுகளையும் அதிகரிக்கவே நன்கொடையாக நிதி பெறப்படுகின்றது' என்பதாகும்.

மேற்படி பாடசாலைகளைப் பொறுத்தவரை மாணவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்குவதற்காக அரசாங்கம் இந்தப் பாடசாலைகளுக்குப் பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்கின்றது. காலாண்டுக்கு ஒரு தடவை பாடசாலைகளுக்கு தேவையான வள உள்ளீடுகளும் வழங்கப்படுகின்றன. இவற்றைவிட அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து இந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கணினிகளையும் வழங்குகின்றன. அத்துடன்,ஜப்பான் நாட்டின் 'ஜெய்க்கா' செயற்திட்டத்தினூடாகவும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

இந்நிலையில் இந்தப் பாடசாலைகள் பெற்றோர்களிடமிருந்து எதற்காக நன்கொடை என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான ரூபாவை பெற்றுக்கொள்கின்றனவென்ற கேள்வி அனைவர் மத்தியிலும் எழுந்திருக்கின்றது.

பெற்றோர்களின் சம்மதமின்றி வெளியே யாருக்கும் தெரியாமல் இவ்வாறு பணம் வசூலிக்கின்ற செயலானது இலஞ்சத்திற்கு ஒப்பானதாகவே இருக்கின்றது.

இந்தச் செயற்பாடுகள் தொடர்பாக வலயக்கல்விப் பணிப்பாளர்களும் மத்திய மாகாண கல்வி அமைச்சர்களும் மௌனம் காப்பது குறித்துப் பெற்றோர்கள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர். இவர்களின் மௌனம் இந்தச் செயற்பாட்டை மேலும் ஊக்குவிக்கவே வழிவகுக்கும் தெரிவித்துள்ள பெற்றோர்கள் இலவசக்கல்வி முறை ஒழிப்பின் ஆரம்பமாகவும் இன்று அமைந்துவிடுமென்றும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.



கல்வி கற்பதென்பதும் விரும்பிய பாடசாலையில் இணைவதென்பதும் ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமையாகும். பணத்தைக் காரணம் காட்டி அவர்களின் கல்வி உரிமையையும் பாடசாலைத் தெரிவுரிமையையும் மறுப்பதானது அவர்களின் அடிப்படை உரிமை மீறுவதற்குச் சமமாகும்.இந்த விடயத்தில் மௌனம் காப்பதை விடுத்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நடவடிக்கை எடுப்பதும் அதை ஊடகங்கள் வாயிலாகப் பொது மக்கள் அறியச்செய்வதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கால்களின் இரகசிய மொழி

‘காலாலே நிலத்திலே கோலம் போட்டுக் காட்டுறா, கம்பி போட்ட ஜன்னலிலே கன்னத்தைத் தேய்க்கிறா’

இது ஒருபழைய சினிமாப் பாடலின் வரிகள். தன்னைக் கண்டு நாணமுற்ற காதலி கால் விரல்களினால் நிலத்தில் அங்குமிங்குமாகக் கீறுவதை காதலன் வர்ணிப்பதாக அமைந்தவை அந்த வரிகள்.

பெண் ஒரு ஆணை விரும்புகிறாளா இல்லையா என்பதை அவளின் கால் அசைவுகளைப் பார்த்துத் தீர்மானித்துக் கொள்ள முடியுமென்று அண்மையில் விஞ்ஞான ரீதியாக ஆய்வொன்றில் கண்டுபிடிக்கப்பட்டதாக இணையத்தளமொன்றில் வெளியான தகவலைப் படித்ததும் மேற்படி பாடல் வரிகள் தான் சட்டென நினைவுக்கு வந்தன.

ஆண்களே உங்களை பெண்ணொருத்தி விரும்புகிறாளா இல்லையா என்பதை அறிய அவளது கண்சிமிட்டலுக்காக காத்திருக்காதீர்கள். இனி மேல் அவளின் கால்களின் அசைவுகளை அவதானித்தாலே போதும்.

‘எங்களது காலின் சாடை காட்டுதல்கள் உடல்மொழி (*Body Language*) யின் மிகவும் வலிமைமிக்க வடிவம் என்று நம்பப்படுகிறது. ஏனென்றால், கால்களால் என்ன செய்கிறோம் என்பதை நாம் மிகவும் குறைந்தளவிலேயே உணர்கிறோம்.

ஆண்களே உங்களைப்பற்றி ஒரு பெண்ணுக்கு ஏதாவது நினைப்பு இருக்கிறதா என்பதை அறிந்து கொள்வதற்கு அவள் பல் இளிக்கும் போது உடலின் நேர் நிலையில் இருந்து விலகி கால்கள் அசைகின்றனவா என்பதை அவதானியுங்கள். அதுவும் இருபாதங்களையும் எட்ட வைத்து நிற்கிறாளா என்பதையும் நோக்குங்கள். அவ்வாறு அவள் செய்கிறாள் என்றால் நீங்கள் அவளைக் கவருகிறீர்கள் என்று அர்த்தம்.

குறுக்குவாட்டாக கால்களை உடலின் கீழ் ஒருங்கிணைத்து வைத்திருக்கிறாள் என்றால் நீங்கள் வேறு அலுவலைப் பார்க்கலாம்.

பெண்களுக்கு இது ஒரு மகிழ்ச்சிதராத செய்தி. ஏனென்றால் மேற்கூறப்பட்ட உடல்மொழி விதிகள் ஆண்களுக்கும் பிரயோகிக்கப்படக்கூடியதல்ல என்று ‘த ரெலிகிராவ்’ பத்திரிகை கூறியிருக்கிறது.


வேறுபட்ட சூழ்நிலைகளில் பலரின் கால்களின் பிரதிபலிப்பை ஆராய்ந்த பின்னர் பிரிட்டனின் முன்னணி உள நல மருத்துவ நிபுணர்களில் ஒருவரான பேராசிரியர் ஜியோவ் பீற்றீ மேற்கூறப்பட்ட முடிவுகளுக்கு வந்திருக்கிறார்.

எங்களது முகபாவனை (*facial expression*) அல்லது கைகளின் சைகைகள் எத்தகைய செய்தியைச் சொல்கின்றன என்பதை நாம் தெரிந்திருக்கக்கூடும். ஆனால் எங்கள் கால்கள் அசைகின்றனவா அல்லது அவற்றின் அசைவுகள் என்ன செய்தியைச் சொல்கின்றன என்பதைப் பற்றி அடிக்கடி எமக்குத் தெரிவதில்லை என்று மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் உளவியல் விஞ்ஞான பீடத்தின் தலைவராக இருக்கும் பேராசிரியர் பீற்றீ கூறுகிறார்.

எங்களினால் சிரிப்பை மறைக்கலாம், அல்லது எமது கண்களால் நாம் என்ன செய்கின்றோம் என்பதையும் மறைக்கலாம், ஆனால், எமது கால் அசைவுகள் கூறும் செய்தியை மற்றவர்களினால் எளிதில் புரிந்து கொள்ளமுடியும். எமது கால்களின் அசைவுகளைப் பற்றி நாம் எப்போதுமே உணர்ந்து கொண்டிருப்பதில்லை.

காலின் இரகசிய மொழி எங்களது ஆளுமையைப் பற்றி (*personality*) பல விடயங்களை வெளிக்காட்டுகின்றது. நாம் ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கும் போது அவரைப் பற்றி என்ன நினைக்கிறோம் என்பதை அல்லது எமது உணர்வு நிலையையும் உளவியல் நிலையையும் (*Our emotional and psychological state*) காலின் அசைவுகள் காட்டிக் கொடுத்துவிடும். காலின் இரகசிய மொழி சொற்களைப் பயன்படுத்தாமல் மற்றவர்களுடன் தொடர்பாடலைச் செய்யக்கூடிய கவர்ச்சியான ஒரு மார்க்கமாகும் என்று பேராசிரியர் விளக்கியிருக்கிறார்.

ஒருவரை நீங்கள் முதன்முதலாகச் சந்திக்கின்றீர்கள் என்றால் அவர்களைப் பார்த்து சிரிப்பது ஒரு நல்லகாரியமாக இருக்குமென்று நிச்சயமாக கூறமுடியாது. நீங்கள் இல்லாமலோ அல்லது உங்களுடன் ‘சேர்ந்தோ ஆட்களால் சிரிக்க முடியும். ஒரு பெண் சிரிக்கும் போது அவளின் கால்கள் அசைகின்றன என்றால் அவள் உங்களை விரும்புகிறாள் என்பதற்கான மிகவும் சக்தி மிக்க சமிக்ஞைகளில் ஒன்றாகும். குறுக்குவாட்டாக கால்களை வைத்திருக்கிறாள் என்றால் அது நல்லதல்ல என்றும் அவர் கூறியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசுகளின் ஆயுதப் போட்டியை முடிவுக்குக் கொண்டுவந்த நாய்ச்சண்டை



அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான ஆயுதப் போட்டி உச்சக்கட்டத்தில் இருந்த காலகட்டம் அது.

ஆயுதப் போட்டியை மேலும் தொடரவிட்டால் முழு உலகுமே அழிந்துவிடும் என்று இரு வல்லரசுகளுமே உணரத் தொடங்கின.

வெள்ளை மாளிகையையும் கிரெம்ளினையும் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் மூன்றாம் நாடொன்றின் தலைநகரில் மகாநாடொன்றைக் கூட்டி ஆயுதப் போட்டியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வழிவகைகளை ஆராய்ந்தனர். இருநாடுகளுக்கும் இடையேயான போட்டியை ஒரு நாய்ச்சண்டையை நடத்தி அதன் முடிவின் அடிப்படையில் தகராறுகளுக்குத் தீர்வைக் காண்பதென்றும் அதற்கான ஏற்பாடுகளுக்கு 5 வருடகால அவகாசம் வழங்குவதென்றும் இணங்கிக் கொண்டனர்.

ஆயுதப் போட்டியை முடிவுக்குக் கொண்டுவரத் தீர்மானித்த இரு நாடுகளினதும் அதிகாரிகள் இப்போது உத்தேச நாய்ச் சண்டைக்கான ஏற்பாடுகளில் ஏட்டிக்குப் போட்டியாக ஈடுபடத் தொடங்கினர். சண்டையில் வெற்றி பெறுகின்ற நாய் எந்த நாட்டைச் சேர்ந்ததோ அந்த நாடே உலகைத் தனது மேலாதிக்கத்தில் வைத்திருக்க அனுமதிக்கப்படும் என்பதே இணக்கப்பாடாகும்.

ஏற்கனவே, உலகமேலாதிக்கத்துக்காகப் போட்டாபோட்டியில் ஈடுபட்டு வந்த அமெரிக்காவும் ரஷ்யாவும் நாய்ச் சண்டையில் வெற்றி பெறுவதன் மூலமாக உலகை தங்கள் மேலாதிக்கத்தில் வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளில் ஏட்டிக்குப்போட்டியாக இறங்கின. நாய்ச்சண்டையில் தோல்வியடையும் நாடு அதன் ஆயுதங்களை நிர்மூலஞ் செய்துவிட வேண்டுமென்பதே நிபந்தனை.

ரஷ்யர்கள் உலகிலேயே மிகப் பெரியதென வர்ணிக்கப்படக் -கூடிய நாயை உற்பத்தி செய்யும் திட்டத்தை வகுத்து ரஷ்யாவில் இருக்கக் கூடிய உயரமானதும் வல்லமை பொருந்தியதுமான இனத்தைச் சேர்ந்த பெட்டை நாயொன்றை சைபீரியன் ஓநாயுடன் புணரவைத்து புதியரக சண்டை நாய் இனத்தைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகளில் இறங்கினர்.

சைபீரியன் ஓநாயுடன் புணர்ந்த ரஷ்ய நாய் ஐந்து குட்டிகளை ஈன்றது. ஒரு கடுவன் குட்டியைத் தவிர மற்றைய ஏனைய குட்டிகளைக் கொன்ற ரஷ்ய அதிகாரிகள் முழுப்பாலையும் அந்தக் கடுவன் குட்டியே குடித்தால் பிரமிக்கத்தக்க வளர்ச்சியடைந்து பிரமாண்டமான நாயாக வருமென்று எதிர்பார்த்தனர்.

ஐந்து வருட முடிவில் அந்த நாய்க்குட்டி பிரமாண்டமானதாக வளர்ந்தது. தாங்கள் எதிர்பார்த்ததைப் போலவே உலகிலேயே மிகவும் வல்லமை பொருந்திய நாயை உருவாக்கிவிட்ட பெருமிதத்தில் ரஷ்ய அதிகாரிகள் நாய்ச் சண்டைக்கான திகதியைக் குறிக்குமாறு அமெரிக்க அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டனர்.

மூன்றாவது நாடொன்றில் நாய்ச்சண்டையை வைத்துக் கொள்வதற்கு இரு தரப்பினருக்கும் ஏற்புடையதான திகதி குறிக்கப்பட்டது.

அமெரிக்கர்கள் சண்டைக்கெனக் கொண்டுவந்த நாயும் இதுகாலவரையில் உலகின் எந்தப் பகுதியிலுமே காணப்படாத தோற்றத்தையுடைய விகாரமான இனத்தைச் சேர்ந்த நாயாகவே காட்சியளித்தது.

சண்டை தொடங்கியது ஒரு சில நிமிடங்களுக்குள்ளாகவே ரஷ்ய நாயை மடக்கிய அமெரிக்க நாய் அதை கடித்துக் குதறி முற்று முழுவதுமாக விழுங்கி விட்டது. ஆங்காங்கே சில இரத்தத் துளிகளைத் தவிர ரஷ்ய நாயின் அடையாளமென்று எதையுமே சண்டைக்களத்தில் காணக்கூடியதாக இருக்கவில்லை.

ரஷ்யர்கள் திகைத்துப் போய்விட்டார்கள். உலகிலேயே மிகவும் உயர்ந்ததும் வல்லமை பொருந்தியதுமான நாய் இனத்தை உருவாக்கி அதிலிருந்து ஒரு குட்டியை மாத்திரமே பிரமாண்டமானதாக வளர்த்த ரஷ்யர்கள் தலையில் கையை வைத்த வண்ணம் அமெரிக்க அதிகாரிகளைப் பார்த்து 'உங்கள் நாயின் இனத்தின் பெயரைச் சொல்ல முடியுமா' என்று கேட்டார்கள்.

அமெரிக்கர்கள் பதிலளித்தார்கள் - இது ஒன்றும் விநோதமான இனத்தைச் சேர்ந்த நாயே இல்லை. முதலையொன்றைப் பிடித்து கடந்த ஐந்து வருடங்களாக பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணரைக் கொண்டு நீளமான நாயின் தோற்றத்துக்கு அதை மாற்றியெடுத்திருக்கிறோம். அவ்வளவுதான்!

# கிணற்றுக்கு மேலே வெள்ளைக்காரன்



அரபுநாட்டு இராஜதந்திரியொருவர் முதற்தடவையாக வாஷிங்டனுக்குப் போனார். இராஜாங்க திணைக்களத்தில் அவருக்கு தடல்புடலாகவிருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

அமெரிக்க உணவுவகைகளில் கூடுதலாக உப்பு சேர்க்கப்படுவது வழமையாம். உப்பு அதிகமாகக் கலக்கப்பட்ட உணவை அருந்திய அரபு இராஜதந்திரிக்கு கடுமையான தாகம் ஏற்பட்டது. தன்னுடன் கூட்டிவந்த உதவியாளரை அழைத்து தண்ணீர் கொண்டுவரும்படி அவர் கேட்டார்.

உதவியாளரும் ஒரு சிறிய கிளாஸில் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்தார். இந்தத் தண்ணீரை எங்கிருந்து கொண்டு வருகிறீர் என்று அரபு இராஜதந்திரி கேட்க, உதவியாளர் இராஜாங்கத் திணைக்களக் கட்டிடத்திற்குள் இருக்கும் சிறிய துப்புரவான கிணற்றில் இருந்து எடுத்துவருகின்றேன் என்று பதிலளித்தார்.

'சிறிய கிளாஸ் என்பதால் இராஜதந்திரி தாகத்தைத் தீர்க்க அந்தத் தண்ணீர் போதவில்லை. மேலும் தண்ணீர் கொண்டுவரும்படி இராஜதந்திரி கேட்க உதவியாளரும் கொண்டு வந்து கொடுத்தார்.

இவ்வாறாக நான்கு, ஐந்து தடவைகள் உதவியாளர் கொண்டு வந்த தண்ணீரை இராஜதந்திரி குடித்துமுடித்தார். அப்போதும் அவரது தாகம் தீரவில்லை. மீண்டும் தண்ணீர் எடுத்துவரப்போன உதவியாளர் வெறும் கிளாஸுடன் வந்தார்.

ஏன் தண்ணீர் கொண்டு வரவில்லை? என்ன நடந்தது? என்று அரபு இராஜதந்திரி கேட்டார். நான் இதுவரை தண்ணீர் எடுத்த கிணற்றுக்கு மேலே ஒரு வெள்ளையன் குந்தியிருக்கிறான் என்று உதவியாளரிடமிருந்து பதில் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சாதாரண நெஞ்சு வலியுடனும் நீரிழிவு நோயாளிகளில் மாரடைப்பு வரலாம்



வலியானது உணரப்படும் வகை, கால அளவு, வலியின் பரவுகை என்பவற்றுக்கேற்ப வேறுபடும். இதற்கமைய வலியின் பாரதூரத் தன்மையும் வேறுபடும். நெஞ்சுவலி, சுவாசநோய்கள், இரப்பைப் புண், மாரடைப்பு போன்ற நோய் நிலைகளில் ஏற்படலாம். இவை ஒவ்வொன்றின் போதும் ஏற்படும் வலியின் தன்மை இயல்பில் மாறுபட்டதாகக் காணப்படும். இங்கு நாம் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய வலி, நெஞ்சை இறுக்குவதைப் போன்ற வலியே ஆகும். இவ்வகையான வலி மாரடைப்பு நோயின் போது பெரிதும் உணரப்படும். எனினும் நீரிழிவு நோயுடையவர்களில் மாரடைப்பு நோய் ஏற்படும் போது நெஞ்சு வலி என்பது பெரிதும் ஏற்படாத நிலை காணப்படலாம். இதனை அமைதியான மாரடைப்பு என அழைப்பர். இவ் ஆபத்து நிலை பற்றிய போதியறிவு இன்மையால் நீரிழிவு நோயாளிகளிடையே ஏற்படும் மாரடைப்பினால் மரணங்கள் ஈற்று விளைவாகி விடுகின்றன.

மாரடைப்பு நோயை விரைவில் இனங்காண்பதும் காலதாமதம் இன்றி அதற்கான சிகிச்சை முறைகளைச் செயற்படுத்துவதுமே அதன் வெற்றியை அல்லது மாரடைப்பில் இருந்து மீள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இங்கு கால தாமதம் என்பது அதிகரிக்கும் போது சிகிச்சை பலனளிக்காத நிலை ஏற்படுகின்றது.

மேலும் உயர் குருதி அமுக்கம், உடல் நிறை அதிகமுள்ளவர்கள் புகை, மதுவால் ஆட்கொள்ளப்பட்டவர்கள், குருதியில் கொலஸ்ரோல் கூடியவர்கள், நீரிழிவு நோயாளிகள் மற்றும் அரிதான உடற் செயற்பாடு கொண்ட வாழ்க்கை முறை உடையவர்கள், உடற்பயிற்சியை நாடாதவர்கள், மேலும் வயதெல்லை 45 ஐத் தாண்டிய ஆண்கள் மற்றும் வயதெல்லை 55 ஐத் தாண்டிய பெண்கள் போன்றவர்கள் மாரடைப்பு நோயின் பிடியில் எளிதில் சிக்கிக் கொள்ளக் கூடியவர்கள். இவர்களில் நெஞ்சு வலி ஏற்படும் போது கவனத்துடன் செயற்படும் போது ஆபத்திலிருந்து மீண்டுவிடலாம்.



மாரடைப்பு நோயானது பொதுவாக நெஞ்சை இறுக்குவது போன்ற ஒரு வலியாகவே உணரப்படும். அதாவது நடு நெஞ்சுப்பகுதியில் அமுக்குவது அல்லது இறுக்குவது போன்றதாக அமையும். மூச்சுவிட சிரமம் ஏற்படுவதும் வலியானது இடது தோள்பட்டை, கை, தாடை பகுதிகளில் உணரப்படலாம். வலியானது தொடர்ச்சியாக 30 நிமிடங்களுக்கு மேல் காணப்படுவதோடு மரண பயமும் ஏற்படும். இத்துடன் வியர்த்தல், வயிற்றுவலி, சத்தி, நெஞ்சு படபடப்பு, தலைச்சுற்று, மயக்கம், குளிர்நிலை என்பனவும் ஏற்படலாம். இருப்பினும், சலரோக நோயாளிகளில் மாரடைப்பு பெரிதளவில் வலியை ஏற்படுத்தாது. இதயப் பாதிப்புகளை ஏற்படுத்திவிடும் சந்தர்ப்பங்களே காணப்படுகின்றன. இவர்கள் சிறிதளவு வலியை உணர்வார்களாயினும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டி உள்ளது. மேற்படி அறிகுறிகள் தென்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாக சற்றும் தாமதமின்றி மருத்துவ வசதிகள் கூடிய மருத்துவமனையை நாட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு உறுதி செய்யப்பட்ட மாரடைப்பு நோயாளிகளில் இரத்தக் குழாய்களில் ஏற்படும் கட்டிகளைக் கரைக்க ஊசி மருந்துகள் அல்லது உட்பாய்ச்சுகை கருவியினூடு மருந்துகள் செலுத்தப்படலாம். மருந்தின் தெரிவு நோயின் தன்மை, நோயாளியின் இயலுமை, இதர நோய்கள் என்பவற்றுக்கேற்ப மாறுபடும். நொடியும் மரணத்தை நோக்கி நகர்வதால் விரைந்து செயற்பட்டு மரணத்தை வெல்வோம்.

டாக்டர்
வெ.நாகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லரின் யூத வெறுப்புக்கு அடிப்படைக் காரணம்...?



ஜேர்மன் சர்வாதிகாரி அடொல்ப் ஹிட்லருக்கு யூத இனத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டதற்கான காரணங்கள் குறித்து முன்னர் பல்வேறு விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டன.

தற்போது வெளியாகியிருக்கும் புதிய நூல் ஒன்றில் ஹிட்லரின் யூத வெறுப்பிற்கு அவரது தாய்க்கு யூத டாக்டர் ஒருவர் கொடுத்த மருந்து நஞ்சாகியதால் ஏற்பட்ட மரணமே காரணம் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஜோக்கிம் ரீக்கர் என்ற ஜேர்மன் செய்தியாளர் கடந்த வாரம் "November 9; How world war One Led to the Holocaust" என்ற நூலை வெளியிட்டிருக்கிறார்.

ஹிட்லரின் தாயார் கிளாரா மார்பகப் புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று மருத்துவர்கள் கண்டுபிடித்த போது ஹிட்லருக்கு 18 வயது.

கிளாராவின் டாக்டரான எடுவார்ட் புளொச் யூத இனத்தைச் சேர்ந்தவர். மார்பகப் புற்று நோயினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அயடோபோம் என்ற ஊசிமருந்து ஏற்றப்படுவதே அந்தக் காலத்தில் வழமையாக இருந்தது. 1907 ஆம் ஆண்டு 47 வயதான கிளாராவுக்கு அதே ஊசி மருந்து ஏற்றப்பட்டது. சிகிச்சையின் போது அவர் மரணமடைந்தார்.

தாயாரின் மரணம் இளைஞனான ஹிட்லரின் மனதில் அழிக்க முடியாத பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஹிட்லர் அந்த யூத டாக்டரை தன் வாழ்நாளில் ஒருபோதுமே மன்னிக்கவில்லை என்று ஜோக்கிம் ரீக்கர் தனது நூலில் எழுதியிருக்கிறார்.

ஜோசப் கொயபெல்ஸ் போன்ற தனது நெருங்கிய உதவியாளர்களுடனான சம்பாசணைகளின் போது ஹிட்லர் காசநோய் போன்றவர்கள் என்று யூதர்களையும் ஜேர்மனியில் உள்ள காசநோயை இல்லாதொழிக்கப்போகும் மருத்துவம் என்று தன்னையும் வர்ணித்ததாக ரீக்கர் எழுதியிருக்கிறார்.

பல நாடுகளை ஆக்கிரமிக்கத் துணிச்சல் கொண்ட ஹிட்லருக்கு பல் மருத்துவர்களிடம் செல்வதென்றால் கடுமையான பயமாம்.

இந்தத் தகவல் "Dentist Of the Evil" என்ற தலைப்பில் ஜேர்மனியில் கடந்த வாரம் வெளியாகியிருக்கிறது. மெனெவ்சி டெப்ரெம்-ஹெனென் என்பவரால் எழுதப்பட்ட இந்த நூல் ஹிட்லரின் பல் மருத்துவம் ஜோஹான்ஸ் பிளாஸ்கேயின் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது.

ஜோஹான்ஸ் பிளாஸ்கே சுமார் 20 வருடங்களாக ஹிட்லரின் பல் மருத்துவராகப் பணியாற்றியிருக்கிறார் என்றும் நூலில் கூறப்பட்டிருக்கிறது.

# மனைவியிடம் வாரம் ஒரு தடவை அடி உதை வாங்க கணவன் உடன்படிக்கை

மனைவி தன்னை வாரமொரு தடவை தாக்குவதற்கு அனுமதிக்கும் உடன்படிக்கையொன்றைக் கணவர் ஒருவர் செய்திருக்கிறார்.

இந்த விசித்திரம் சீனாவில் இடம்பெற்றிருக்கிறது.

32 வயதான இந்தக் கணவரின் பெயர் ஷாங் என்று மாத்திரம் ஷொங்கிங் ஈவினிங் நியூஸ் என்ற பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

குங் பூ தற்காப்புக் கலையைக் கற்றுவரும் மனைவி கணவருக்குக் கடுமையான தொல்லைகளைக் கொடுத்துவருகிறார். அவரை அடிக்கடி தாக்கிக் காயப்படுத்துகிறார். இந்தக் கொடுமையில் இருந்து விடுபடுவதற்காகவே வாரமொருமுறை தன்னை மனைவி தாக்குவதற்கு அனுமதிக்கும் விசித்திர இணக்கப்பாட்டுக்கு அவர் வந்திருக்கிறார் என்று பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

'நான் எனது கணவரைத் தாக்க விரும்பவில்லை, ஆனால், குடும்பத்தில் வாக்குவாதங்கள் தவிர்க்க முடியாதவை. அதனால் ஆத்திரமிகுதியில் அவரைத் தாக்குவதைத் தவிர வேறு எதையும் என்னால் செய்ய முடியவில்லை' என்று மனைவி பத்திரிகைக்குக் கூறியிருக்கிறார்.

வாரமொருமுறை தாக்கும் உடன்படிக்கை செய்து கொள்ளப்படுவதற்கு முதல்வாரம் கணவனை மனைவி மூன்று தடவைகள் கடுமையாகத் தாக்கித் துன்புறுத்தியிருக்கிறார்.

மனைவி வர்த்தக நிறுவனமொன்றில் வியாபார முகாமையாளராகப் பணிபுரிகிறார். சிறுபராயத்தில் இருந்தே குங் பூ கலையை அவர் பயின்றுவருகிறார்.

'நான் மனைவியினது உறுதியானதும் சுதந்திரமானதுமான மனப்பாங்கினால் பெரிதும் கவரப்பட்டேன். திருமணம் செய்வதற்கு முன்னர் 6 மாத காலமாக நாம் காதலர்களாக பழகிக் கொண்டோம். அந்த 6 மாத காலத்திலும் மனைவியின் தாக்குதல்களினால் நான் வேதனைப்பட்டேன். கவர்ச்சியில்லாத முறையில் அவர் தனது சிகையலங்காரத்தைச் செய்துகொள்வார். அந்தச் சிகையலங்காரத்துடன், அவரைப் பார்க்கும் போது பெண்புலி போன்று இருக்கிறது என்று கேலி செய்தேன். அதைத் தொடர்ந்து மூண்ட வாக்குவாதத்தின் போது சில தகாதவார்த்தைகளை நான் உச்சரித்துவிட்டேன். அதற்குப் பிறகு குங் பூ வின் ருசியை நான் தெரிந்து கொண்டேன். மனைவியின் தாக்குதலுக்கு நான் அப்போது தான் முதற்தடவையாக இலக்காகினேன். மனைவியுடனான வாக்குவாதங்களின் போது நான் விட்டுக்கொடுக்கமாட்டேன். கடுமையாக வாதிடுவது எனது சுபாவம், அதனால் இறுதியில் மனைவியிடம் அடிவாங்கிக் கொள்கிறேன்' என்று கணவன் கூறுகிறார்.

மனைவியின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு வழிவகையாகவே எமது உறவுக்காரர்கள் முன்னிலையில் உடன்பாடொன்றுக்கு வரத் தீர்மானித்ததாகக் கூறிய கணவர் உடன்படிக்கையை மீறினால் மனைவி மூன்று நாட்களுக்குத் தனது பெற்றோர் வீட்டுக்குச் சென்று தங்கியிருக்க வேண்டும். இதுவே நிபந்தனை என்று பத்திரிகைக்கு விளக்கமளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் முடியும் விதி

யாழ்.குடாநாட்டில் வாகன நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் விபத்துகளும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள், உடற்காயங்களுக்குள்ளாதல்களும் உயர்வடையத் தொடங்கியுள்ளன.

யாழ்.குடாநாட்டில் காணப்படும் அகலம் குறைந்த வீதிகள், பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாத வீதிகள், போக்குவரத்துக் கண்காணிப்புகள் சீராக இடம்பெறாமை, இளவட்டங்களின் ரேஸ் ஓட்டங்கள், மதுப்பாவனை போன்றவையே இங்கு விபத்துகளுக்கு பிரதான காரணங்களாகின்றன.

அதிலும் குறிப்பாக குடாநாட்டை ஆக்கிரமித்திருக்கும் மோட்டார் சைக்கிள்களே விபத்துகளில் பெரும் பங்குவகிக்கின்றன. மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்துகளிலேயே அண்மைய நாட்களில் குடாநாட்டில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இங்கு தற்போது போக்குவரத்துப் பொலிஸார் தமது செயற்பாடுகளை தீவிரப்படுத்தி சாரதி அனுமதிப்பத்திரம், தலைக்கவசம், வாகனத் தரம் போன்ற வற்றை கடுமையான முறையில் சோதனையிடத் தொடங்கியுள்ளதால் இன்று பலரும் தண்டப்பணங்களை செலுத்த வேண்டியிருப்பதுடன், தண்டனைகளையும் அனுபவிக்கின்றனர்.

குடாநாட்டின் நகரப் பகுதிகளிலேயே போக்குவரத்து பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. கிராமப் புறங்களுக்குள் பொலிஸார் போக்குவரத்து விதிகளை அமுல்படுத்துவதில் அக்கறை காட்டுவதில்லை. இதனால் கிராமப்புறங்களிலும் பல வீதி விபத்துகள் இடம்பெறுகின்றபோதும் அவை பதிவுகளில் இடம்பெறுவதில்லை.

உலகளாவிய ரீதியில் வீதி விபத்துகளினாலும், வாகன நெரிசலினாலும் வருடத்திற்கு 1.2 மில்லியன் மக்கள் பலியாவதாகவும், 50 மில்லியன் மக்கள் படுகாயமடைவதாகக் கணிப்பிடப்பட்டுள்ளதுடன், இன்னும் 20 வருடங்களில் இத்தொகை 65 வீதமாக அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மது போதையில் வாகனம் செலுத்துதல், வாகனம் செலுத்தல் தொடர்பான போதிய அறிவின்மை, கையடக்கத் தொலைபேசிகளின் உபயோகம், போக்குவரத்து முறைமைகளைச் சரியாகப் பின்பற்றாமை அதிக வேகம், வாகன நெரிசல் போன்றவையே விபத்துகள் ஏற்படக் காரணமாகின்றன.

இது தொடர்பாக ஓய்வுபெற்ற பிரதம பொலிஸ் அத்தியட்சரும் பத்தரமுல்லை மோட்டார் இயந்திர உயர்கல்வி நிலையத்தின் தலைவருமான பீ.பீ.பீ.சில்வா தெரிவிக்கையில்;



'இலங்கையில் பெருமளவு வீதி விபத்துகள் ஏற்படக் காரணம் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் 'போக்குவரத்து பாதுகாப்பு' தொடர்பான கையேடுகள் இல்லாமை, விபத்துகளை ஏற்படுத்திய சாரதிகளுக்கு முறையான தண்டனை வழங்கப்படாமை, இது தொடர்பில் புதிய முறைகள் பயன்படுத்தாமை போன்றவையே வீதி விபத்துகள் ஏற்படக் காரணமாகவுள்ளன.

மேலும் இலங்கையில் வீதி விபத்து தொடர்பான சட்ட முடிவினைப் பொதுமக்கள் தீர்மானிப்பதுடன், குற்றவாளியாகக் கணிக்கப்பட்ட சாரதிக்குத் தகுந்த முறையில் தண்டனை வழங்கப்படுவதில்லை. இந்நிலை மாற வேண்டும். மாறாக மேற்குலக நாடுகளில் சாரதி மீது குற்றம் சுமத்தப்பட்டால் அவரின் சாரதி அனுமதிப் பத்திரம் குறிப்பிட்ட காலத்திற்கு அந்நாட்டு போக்குவரத்து அதிகார சபையினரால் தடுத்து வைக்கப்படுகிறது.

ஏனைய நாட்டு சாரதிகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையிலுள்ள பெரும்பாலான சாரதிகளிடம் சுயஒழுக்க முறைகள், வாகனம் செலுத்துவதற்குரிய மனோபாவம், இது தொடர்பான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு அடிப்படைப் பயிற்சிகள் குறைவாகவே காணப்படுகிறது.

தண்டனை, நீதி சட்டத்தின் 73 ஆம் சரத்தின் படியும் மோட்டார் வாகன சட்ட மூலத்தின் 168 ஆவது சரத்துப்படியும் துரதிர்ஷ்டவசமாக இடம்பெறுகின்ற விபத்து ஏற்படும் சாரதிகளுக்கு மன்னிப்பு வழங்கும் சட்டம் நடைமுறையிலிருந்தும் இச் சட்டம் பின்பற்றப்படாமலுள்ளது.

இருந்தாலும் சுயநலமற்றவர்களாகச் செயற்படாமை, இடப்பக்கம் நடத்தல், நேர முகாமைத்துவம், ஒவ்வொரு நேரங்களிலும் வெவ்வேறு முறையில் செயற்படுவதைத் தவிர்த்தல் போன்ற வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் பாதசாரிகள், பயணிப்போர், வாகன சாரதிகள் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறைவதுடன், விபத்துகள் குறையவும் வாய்ப்புள்ளதாக அவர் மேலும் கூறினார்.

வாகனம் செலுத்துநர் என்பவர் கேட்கும் திறன், பார்வைத் திறன் உடையவராக இருத்தல் வேண்டும். எந்தவொரு முட்டாளுக்கும் வாகனம் செலுத்த முடியும். இருப்பினும் ஒரு நல்ல சாரதி தான் செலுத்தும் வாகனத்தினால் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் செலுத்த முற்படுவர் எனக் கூற முடியும்.

சாரதிகளின் முன்னெச்சரிக்கை தொடர்பாக வீதி விபத்து தடுப்புக் குழுவின் தலைவரும் இலங்கை மருத்துவ சங்கத்தின் உறுப்பினருமான பேராசிரியர் ஏ.எச்.ஷெரிப்தீன் தெரிவிக்கையில்;

மோட்டார் சைக்கிளோ, ஏனைய வாகனங்களோ, நாம் செலுத்தும் வாகனத்தின் திசைக்கு வரும்போது எமது வாகனத்தை வேகமாகவோ இல்லாவிடின் பொதுவாகவோ செலுத்தி விபத்துகள் ஏற்படாமலிருப்பதற்கான திட்டங்களைக் கையாளுதல், அத்துடன் 100 வீத அவதானத்துடனும் சாரதி செயற்பட வேண்டும்.

எப்பொழுதும் படக்காட்சிகளையோ கையடக்கத் தொலைபேசிகளையோ, வானொலி நிகழ்வுகளையோ கேட்டுக் கொண்டும் பார்த்துக்கொண்டும் வேறு சிந்தனைகளுடன் வாகனம் செலுத்துவதைத் தடுப்பதன் மூலம் விபத்துகளைக் குறைக்க முடியுமென அவர் மேலும் கூறினார்.

இவ்வாறான நடைமுறைகளை வாகன சாரதிகள் கடைப்பிடிப்பதுடன், வீதியில் பயணிப்போரும் முன்னெச்சரிக்கையாக இருந்தால் வீதி விபத்துகளைக் குறைக்க முடியும்.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு

★ கறுப்புத் தந்தமுள்ள யானைகள் ஆபிரிக்காவில் உள்ளன.

★ பிளாக்மாலி என்ற மீன் கறுப்பு நிறமுள்ள இரையை மட்டும் உண்ணும்.

★ குதிரையின் கண்களுக்கு கறுப்பு வெள்ளை நிறம் தவிர வேறெதுவும் தெரிவதில்லை.

★ கறுப்பு முத்துக்கள் அதிகமாகக் கிடைக்கும் நாடு மெக்ஸிக்கோ.



★ நாயின் கண்களுக்கு கறுப்பு வெள்ளை நிறம் மட்டும் தான் தெரியும்.

★ வான் வெளியிலிருந்து பார்த்தால் ஆகாயம் கறுப்பு வண்ணத்தில் இருக்கும்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 6 | 7 | 8 | ■ | 9 | 10 |
| 11 | ■ | 12 | 13 | 14 | ■ |
| ■ | 15 | 16 | ■ | ■ | 17 |
| 18 | 19 | ■ | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | ■ | ■ | 26 |

**இடமிருந்து வலம்**

1. இவரை தெரிவு செய்யும் தேர்தல் ஜனவரியில் இடம்பெறவுள்ளது
6. கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேசமொன்று
9. கார்த்தி நாயகனாக நடிக்கும் படம் (திரும்பியுள்ளது)
12. மிக மெதுவாக செல்வது (குழம்பியுள்ளது)
15. இது வழுக்கும்
18. அழகியை இவ்வாறும் சொல்வர் (திரும்பியுள்ளது)
20. பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர்
23. சிலருக்கு இந்நோய் உண்டு (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. சிப்பாய் என்றும் சொல்லலாம்
2. நித்திரையில் வருவது (தலைகீழ்)
3. தமிழ் மாதம் (குழம்பியுள்ளது)
5. முன்னாள் நாயகி நடிகை (குழம்பியுள்ளது)
15. புரட்சிக் கவிஞர்
17. இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி
18. சந்திரன் என்றும் கூறுவர் (தலைகீழ்)

பெயர் : ....................................................................

முகவரி : ....................................................................

....................................................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 10 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. பொன்சேகா | 1. பொடி |
| 6. கோடி | 2. கோன் |
| 8. தாரம் | 4. காரம் |
| 11. அன்னம் | 5. அறம் |
| 15. தேகம் | 9. தானம் |
| 19. மலை | 11. தேன் |
| 23. புவனம் | 15. மனம் |
| | 16. கவலை |
| | 21. தடி |
| | 22. எலி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**சே.ரவிசாந்**
வீரமனை,
குப்பிளான்.

### பாராட்டுப்பெறுவோர்

01. க.ஞானமுத்து
கைதடி மேற்கு, கைதடி.

02. சு.கல்யாணி
தங்கோடை வீதி,
வட்டுக்கோட்டை.

03. செ.செந்தூரன்
41/1, பிரம்படி வீதி,
கொக்குவில்.

04. சி.சோபிகா
வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

05. வே.குமாரசுவாமி
கட்டைவேலி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

உங்கள் விடைகளை
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...




## தெரிந்துகொள்ளுங்கள்!

* உலகில் சுமார் பத்தாயிரம் வகை எறும்புகள் உள்ளன.
* பத்மஸ்ரீ விருதுகள் 1954-ம் ஆண்டு முதல் வழக்கப்பட்டு வரப்படுகிறது.
* நவீன முதல் ஒலிம்பிக் போட்டி 1896 இல் ஏதென்ஸ் நாட்டில் நடைபெற்றது.
* ஞான பீட பரிசு பெற்ற முதல் தமிழ் நாவல் சித்திரப்பார்வை.
* கிரிக்கெட் மட்டை வில்லோ என்ற மரத்தால் செய்யப்படுகிறது.
* நியூயோர்க் நகரின் பழைய பெயர் நியூ ஆம்ஸ்டர்டாம் ஆகும்.
* கழுதைப் பாலில் குளித்த அரசி கிளியோபட்ரா.
* கூடு கட்டி முட்டையிடும் மீன் விராஸ் என்பதாகும்.
* கோலா கரடிகள் ஒரு நாளைக்கு 22 மணி நேரம் தூங்கும்.
* விமானம் தாங்கிக் கப்பலை முதன் முதலில் உருவாக்கியவர்கள் பிரிட்டிஷ்காரர்கள்.

## ஒட்டகம் நீந்துமா...?

ஒட்டகத்திற்கு நீந்தத் தெரியாது.
முதலையால் நாக்கை வெளியே நீட்ட முடியாது.
குரைக்கத் தெரியாத நாய் டிங்கோ என்ற நாயாகும்.
கழுதையின் சராசரி ஆயுட்காலம் 20 ஆண்டுகள்.
ஒட்டகத்தின் சராசரி ஆயுட்காலம் 40 ஆண்டுகள்.
பைசா கோபுரத்தில் 284 படிக்கட்டுகள் உள்ளன.
எருமையின் சராசரி ஆயுட்காலம் 20 ஆண்டுகள்.

## விடுகதை

1.கறுத்த மேகம் கண்ணீர் விட்டால் ஓடோடி வந்து உதவுவான் அவன் யார்?

2.செய்வதைச் செய்யும் குரங்கும் அல்ல;சிங்காரிக்க உதவும் சிப்புமல்ல அது என்ன?

3.குண்டு முழி ராசாவுக்கு குடல் எல்லாம் பல் அது என்ன?

4.கிண்ணம் போல் பூப்பூக்கும் கிள்ளி முடிக்க முடியாது .அது என்ன?

5.ஒல்லி உடம்புக்காரிக்கு ஒரு முழ நீள ஜடை, ஜடையில் ஒரு கல் அது என்ன?

1.குடை 2.கண்ணாடி 3.மாதுளம்பழம்
4.ஊமத்தம்பூ 5.புடலங்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூண்டா விளக்கனையாய்

இடைமருதூர் கி.மஞ்சுளா

அகப்பொருள் பாடல்கள் தொகை நூல்களில் மிகுதியாக இடம்பெற்று விளங்கியபோதும், துறைகள் எல்லாம் தேர்ந்து நூல் ஒன்று புனைய வேண்டும் என்ற அவாவே 'கோவை' இலக்கியம் தோன்றக் காரணம் எனலாம். 96, வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று கோவை ஐந்திணை நெறி வழுவாது அகப்பொருள் தழுவி, கற்பு என்ற பிரிவமைத்து 400 கட்டளைக் கலித்துறைகளால் பாடப்படுவது கோவை எனும் சிற்றிலக்கியம். இதன் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் வரையறுக்கின்றன.

முதலில் தோன்றிய கோவை இலக்கியம். 'திருக்கோவையார்'. அதைத் தொடர்ந்து பாண்டிக்கோவை, தஞ்சைவாணன் கோவை, குலோத்துங்க சோழன் கோவை, அம்பிகாபதிக் கோவை, குளத்தூர் கோவை முதலியன எழுந்தன. 'நாணிக்கண் புதைத்தல்' என்ற ஒரே துறையை அடிப்படையாகக் கொண்டு 'ஒரு துறைக்கோவை' என்னும் நூல் பின்பு தோன்றியது.

மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையார் தான் முதன் முதலில் தோன்றிய கோவை நூலாகும். இறைவனே மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தை அந்தணராக எழுந்தருளி, தம் திருக்கரங்களால் எழுதியருளினார் என்றும் 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று அருளிச் செய்ததால், திருக்கோவையை மாணிக்கவாசகர் அருளிச் செய்ய அதனையும் எழுதி 'திருச்சிற்றம்பலமுடையான்' எனக் கைச்சாத்திட்டு இறைவனார் மறைந்தார் என்றும் கூறப்படுகிறது.

இவ்விரண்டு நூல்களுக்கும் பொருள் யாதென்று தில்லைவாழ் அந்தணர்களும் பொதுமக்களும் வினவ, மாணிக்கவாசகர், தில்லைக் கூத்தனான 'நடராஜப் பெருமானை' 'இதன் பொருள் அவரே' என விரலால் சுட்டிக்காட்டினார் எனவும் இவர் பற்றிய வரலாறு கூறுகிறது. சுருங்கக் கூறினால் சைவத்தையும் தமிழையும் மக்களுக்குக் கற்பிப்பதற்காக இறைவனால் எழுதப்பட்ட ஞானநூல்கள் திருவாசகமும் திருக்கோவையாரும் என்பர். திருக்கோவையார் 'சிற்றம்பலக்கோவையார்' என்றும் வழங்கப்படுகிறது. 'அகப்பொருள் குறித்த திருவாசகம்' என்றும் கூறுவர் மறையவர் 'வேதம்' என்பர் சிவபோகத்தர் 'ஆகமம்' என்பர் காமுகர் 'இன்பநூல்' என்பர். அளவை (தர்க்க) நூலவர், 'எண்ணூல்' என்பர். தமிழ்ப் புலவர் 'இலக்கண நூல்' என்பர். சைவ சித்தாந்திகள், 'சித்தாந்த ஞானநூல்' என்பர். ஆனால், இதைப் பாடக் கேட்டவரும் எழுதியவரும் 'ஆதியங் கடவுளே' ஆதலால் இதன் மெய்ச்சிறப்பு யாதென சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இதை குமரகுருபர சுவாமிகள் தனது 'சிதம்பர மும்மணிக்கோவை' 23, ஆம் செய்யுளில் 'காமஞ் சான்ற ஞானப் பனுவல்' என்று சிறப்பிக்கிறார். இத்தகைய ஞானப் பனுவல் சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் எட்டாவதாகச் சிறப்பிக்கப்படுகிறது.

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தில்லைச் சிற்றம்பலத்து கூத்தப் பெருமான். கிளவித் தலைவன் சிலம்பன் (30),வெற்பன் (33), விடலை (218),ஏந்தல் (245), நாடன் (260) என்று பலவாறு குறிப்பிடப்படுகிறான்.

'இந்நூல் பேரின்பப் பகுதியை நுவல்வது என்பது - 'அதிகார வரலாறு' என்ற தலைப்பில் காணப்படும் ஒரு பாடலில்,

**"அருள் வயின் சிறந்த**
**அகத்திணை மருங்கில்,**
**இருளறு நிகழ்ச்சி**
**இவையென மொழிப"** என்று கூறப்படுவதாலும்

**"ஆகம நூல் வழியினுதலிய ஞான, யோக நுண்பொருளை யுணர்த்துவதற்கரிது"** என்ற உரையில் நுதலிப் புகுதல கக்கூறும் பாடலிற் கூறியுள்ளமையாலும் **"ஈசர்தில்லை யென்றமையின் வீடு பேற்றின்பத்தைச் சுட்டினார்"**. (1-ஆம் பாடலுரை) என்பன போன்ற உரைப் பகுதிகளாலும் அறியப்பெறும்

'பக்தி முக்திக்கு உவமை பெத்தம்,பேரின்பத்துக்கு உவமை சிற்றின்பம் என வைத்து உடம்பை உடைய யோகிகள் பாலுற்ற சிற்றின்பம் அடங்கத் தன் பேரின்பமாக பேரின்பமான பிரமக்கிழத்தியோடு ஓரின்பமான அன்பே- சிவமாய் அருளே- காரணமாக, சுத்தாவத்தையே நிலமாக, நாயகி பரம்பொருளாக, நாயகன் பக்குவ ஆன்மாவாக, தோழி- திருவருளாக, தோழன் ஆன்ம போதமாக,நற்றாய்- பரையாக,திரோதாயி- செவிலித்தாயாக மேலும்,நாயகன் கூற்றெல்லாம் நிகழ்ந்து வரும் நாயகியைச் சிற்றம்பலம்போல வர்ணிப்பதால் நாயகி- பரம்பொருளாயிற்று. பெறுவான் நாயகனும் பேறு நாயகியுமாக இரசமும் நாவும் போல் இருத்தலானும் கொத்தும் துறையும் கருப்பொருளும் உரிப்பொருளும் இடமும் எல்லாம் அருளின்பம் எனக் கொள்க' என்று சீர்காழித் தாண்டவராயர் இதற்கு விளக்கம் கூறியுள்ளார்.

இக்கோவையில் ஓர் அற்புதக் காட்சி: 'புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாவல்' என்ற துறை. ஒரு கட்டழகனின் மேல் காதல் நோய் வயப்பட்ட தலைவி, அடிக்கடி அவனைக் காண வருகிறாள். காதல் பயிர் நாளுக்கு நாள் வேரூன்றி வளர்கிறது. காதல் வளர்வதைப் பார்த்துக் கொண்டு ஊர்மக்கள் சும்மாவா இருப்பார்கள்? திடீரென ஒருநாள் தலைவியைக் காணவில்லை. அவளைக் காணாத அவனது உள்ளம் வாடியது. உடல் தவித்தது. நெஞ்சம் கவன்றது.

இல்லத்தில் தாயாரால் காவல் வைக்கப்பட்டதைத் தோழி மூலம் அறிந்து வாடினான். பின்னர் தோழியின் உதவியோடு, கட்டுக் காவலை மீறித் தலைவனோடு உடன்போக்குச் சென்றுவிட்டாள் தலைவி. காட்டு வழியே அவர்கள் சென்று கொண்டிருந்தபோது, எதிரே ஒரு மூதாட்டி (செவிலித்தாய்) வந்து கொண்டிருந்தாள். அம் மூதாட்டி அவர்களைப் பார்த்து 'மக்களே! உங்களைப் பார்த்தவுடன் என் மகளும் அவளுடைய காதலனும் மீண்டார்கள் என்று நினைத்து அக மகிழ்ந்தேன். இவ்வழியாக காதலர் இருவர் சென்றதை நீங்கள் கண்டீரோ? அவர்களைத் தேடிக் கொண்டு தான் வந்தேன்' என்று பதிலுக்காக ஏங்கி நின்றாள். உடன் வந்த தலைவிக்கு தங்களைப் போலவே முன்னர் காதலர் இருவர் இவ்வழியே சென்றிருக்கின்றனர் என்பது புரிந்தது. அவர்களைத் தேடித்தான் இவள் வந்திருக்கிறாள் என்று கருதிய தலைவன் அந்த மூதாட்டியைப் பார்த்து 'ஆம்! புலியூரில் நின்று அடிமை கொண்டவன் ஒருவன் இவ்வழியே செல்வதைக் கண்டேன்' என்றான். உடனே அம்முதியவள் 'அவனுடன் என் மகள் இருந்ததைக் கண்டீரா?' என்று ஆவலோடு கேட்டாள்.

அதற்கு அவன் 'தன் காதலியைப் பார்த்து 'தூண்டா விளக்கனையாய்!' இந்த அன்னை சொன்ன வடிவம் எத்தன்மைத்து? இவர்கள் என்ன சொல்கிறார்கள்?' என்று ஒன்றும் அறியாதவன் போல் இதற்கான பதிலைதன் காதலியின் மூலம் கூற விரும்பினான். இந்த அற்புதக் காட்சியைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது ஞானப் பனுவலான 'திருக்கோவையார்' பாடல் (244) பாடல் வருமாறு:

**'மீண்டா ரெனஉவந் தேன்**
**கண்டு**
**நும்மையும் மேதகவே**
**பூண்டா ரிருவர் முன் போயி**
**னரே**
**புலியூ ரெனைநின்**
**றாண்டான் அருவரை ஆளி**
**யன்**
**னானைக்கண் டேனயலே**
**'தூண்டா விளக்கனை**
**யா'யென்னையோ**
**அன்னை சொல்லி**
**யதே'**

இதற்கு 'திரோதை பெற்ற சிவத்தைக் காட்டியது' என்று பேரின்பப் பொருள் தரப்பட்டுள்ளது. தலைவனை மட்டும் கண்டதாகக் கூறி தலைவியைப் பற்றிக் கூறுவதற்குத் தன் காதலியைப் பார்க்கும் நிலை,பொருளாழம் மிக்கதாய்,பண்பாட்டுச் சிறப்பு மிக்கதாய் விளங்குகிறது. ஒரு பெண்ணைப் பற்றித்தான் விடை கூறுவது தகுதியன்று என்று

உடன்போக்கு வந்த தலைவன் எண்ணுவதும் தன் காதலிக்கும் கேட்டவளுக்கும் (செவிலித்தாய்) மனக்கலக்கத்தை ஏற்படுத்தும் என்று தெரிந்து, பண்பு வழுவாமல் அவன் கூறும் பதிலும் இப்பாடலுக்குச் சிறப்பு சேர்க்கின்றன. இப்பாடல் மட்டுமா? திருக்கோவையாரில் உள்ள 400 பாடல்களும் படிக்கப் படிக்க, சிற்றின்ப இலக்கியம் என்பதை மறந்து, பேரின்பம் அடைவிக்கச் செய்வன என்பதால் தானோ என்னவோ, இந்த கோவை நூல் 'அகப்பொருள் குறித்த திருவாசகம்' என்று போற்றப்படுகிறது.

இலக்கிய சுவை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செக்ஸி' பட்டம் வென்ற கத்ரீனா



ஆசியாவின் செக்ஸியான பெண் என்ற பட்டத்தை பொலிவுட் நடிகை கத்ரீனா கைப் பெற்றுள்ளார். லண்டனில் இருந்து வெளியாகும் 'ஈஸ்டர்ன் ஐ' என்ற பத்திரிகை, ஆசியாவிலேயே செக்ஸியான 50 பெண்களின் பட்டியலை தேர்வு செய்து வெளியிட்டு உள்ளது. இதில் 24 வயதான இந்தி நடிகை கத்ரீனா கைப் முதலிடம் பெற்றுள்ளார். ஆசியாவில் உள்ள பெண்களிலேயே மிகவும் செக்ஸியானவராக கத்ரீனா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டும் இந்தப் பட்டத்தை கத்ரீனா கைப் தான் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பட்டியலில் உள்ள முதல் 10 பேர்களில் இந்தி நடிகைகள் பிரியங்கா சோப்ராவுக்கு 2 ஆவது இடமும், கரீனா கபூருக்கு 5 ஆவது இடமும், பிபாஷா பாசுவுக்கு 6 ஆவது இடமும், லாரா தத்தாவுக்கு 7 ஆவது இடமும், ஐஸ்வர்யா ராய்க்கு 8 ஆவது இடமும், தீபிகா படுகோனேக்கு 10 ஆவது இடமும் கிடைத்து இருக்கிறது. 3 ஆவது இடத்தை 'ஸ்லம்டாக் மில்லியனர்' படத்தில் நடித்த நடிகை பிரீட்டா பிண்டோ பெற்றுள்ளார். 4 ஆவது இடம் இங்கிலாந்து டெலிவிஷன் நடிகை லைலா ராவ்ஸ்சுக்கும், 9 ஆவது இடம் பாகிஸ்தான் நடிகை மேவிஷ் ஹயாத்துக்கும் கிடைத்து உள்ளது. 49 ஆவது இடத்தில் கமலின் மகள் ஸ்ருதி உள்ளார்.

## ஜனவரியில் அங்காடித்தெரு

வெயில் படத்தின் வெற்றிக்குப் பிறகு டைரக்டர் வசந்தபாலன் இயக்கியுள்ள படம் அங்காடித்தெரு. நாயகனாக மகேஷும், நாயகியாக அஞ்சலியும் நடித்துள்ள இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து விட்டது. ஐங்கரன் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தின் கதைக்களம் சென்னை தி.நகர் தான். இங்குள்ள துணிக்கடையில் வேலை பார்க்கும் இளம் ஜோடியைப் பற்றிய கதை என்பதால் பெரும்பாலான காட்சிகளை தி.நகரிலேயே படமாக்கியுள்ளனர். இதுதவிர தி.நகர் போன்ற அரங்கு போட்டும் படம் பிடிக்கப்பட்டுள்ளது. படத்தில் இடம்பெறும் முக்கியமான ஒரு காட்சியில் கவிஞர் விக்ரமாதித்யன் நடித்திருக்கிறார். ஜி.வி.பிரகாஷ், விஜய் ஆண்டனி ஆகியோர் இணைந்து இசையமைத்திருக்கும் இப்படத்தினை ஜனவரி 22 ஆம் திகதி திரையிட திட்டமிட்டுள்ளனர்.

## 70 வயது பாட்டியாக ஐஸ்



பா படத்தில் 13 வயது சிறுவனாக நடித்த மாமனார் அமிதாப் பச்சனை தொடர்ந்து மருமகள் ஐஸ்வர்யா ராயும் இப்போது பாட்டி வேடத்தில் நடிக்கிறார். விபுல் ஷாவின் ஆக்ஷன் ரீப்ளே படத்தின் குறிப்பிட்ட பகுதி முழுவதும் ஐஸ்வர்யா ராய், 70 வயது பாட்டியாக நடிக்க உள்ளார். இந்தக் காட்சிகள் இப்போது படமாக்கப்பட்டு வருகின்றன. அதற்காக ஐஸ்வர்யா ராய்க்கு ஹொலிவுட் பிரபல மேக்கப் நிபுணர் பால் பேட்டிசன் மேக்கப் போடுகிறார். மிஷன் இம்பாசிபிள் படத்தில் ஹொலிவுட் நடிகர் டாம் க்ரூசுக்கும், ப்ரேவ் ஹார்ட்படத்தில் நடிகர் மெல் கிப்சனுக்கும் அட்டகாசமான மேக்கப் போட்டு அசத்தியவர் பால் பேட்டிசன் என்பது குறிப்பிடத்தக்கது. ஐஸ்வர்யா ராயின் புது வேடம் குறித்து டைரக்டர் விபுல் ஷா கூறுகையில், ஆக்ஷன் ரீப்ளே படத்தில் குறிப்பிட்ட பகுதி முழுவதும் ஐஸ்வர்யா ராய், கிழவியாக நடிக்கிறார். இதற்காக தினமும் 4 முதல் 6 மணி நேரம் வரை அவருக்கு மேக்கப் செய்யப்படுகிறது. அதற்கு அவர் சரியான நேரத்தில் வந்து முழு ஒத்துழைப்பு தருகிறார். அவரை இதுவரை யாரும் கற்பனை செய்து பார்க்காத உருவமாக அந்த வேடம் இருக்கும் என்றார்.

## சந்தானத்துக்கு காசேதான் கடவுள்



விவேக்கின் தலை சாய்ந்து விட்டதால், ஆளாளுக்கு 'அப்பம் தின்ன' ஆரம்பித்திருக்கிறார்கள். இதில் ஸோலோ நகைச்சுவையை நோக்கி பிரமோஷன் ஆகியிருக்கிறார்கள் சிங்கமுத்துவும் இன்னும் சிலரும். ஆனாலும், எந்நாளும் எவர்கிரீன் சந்தானம் தான். வடிவேலு, விவேக் இருவருக்கும் மாற்று என்ற அந்தஸ்தை சில படங்களிலேயே எட்டிப் பிடித்திருக்கிறார் இவர். இன்றைய தேதியில் முன்னணி நாயகர்கள் அத்தனை பேருடனும் கலக்கி வருபவர் சந்தானம் மட்டும் தான். கால்ஷீட்டை கொடுத்தோமா? வருமானத்தைப் பார்த்தோமா? என்ற அவரது பொலிஸிதான் பலரையும் எரிச்சலுக்குள்ளாக்கியிருக்கிறது. ஆனாலும் வேறு வழியில்லாமல் சந்தானம் பக்கம் கையை நீட்டுகிறார்களாம் இந்த முன்னணி நாயகர்கள். அதென்ன வேறு வழியில்லாமல்...? உண்மை தான். படத்தில் நடிப்பதோடு வேலை முடிந்தது என்று ஒதுங்கிக் கொள்கிறாராம் சந்தானம். ஓடியோ ரிலீஸ், அண்டங்காக்கா ரிலீசுன்னு என்னய கூப்பிட்டு நேரத்தை சாப்பிடாதீங்கப்பா என்கிறாராம் எந்த விழாவுக்கு அழைத்தாலும், 'அந்த நேரத்தில் ஒரு படத்திலே நடிக்க கால்ஷீட்டு கொடுத்தா லட்சம் லட்சமா சம்பாதிப்பேன். அதை விட்டுட்டு எதுக்காக வெட்டி பேச்சு பேசணும்?' என்கிறாராம்.

## தம்பிக்கோட்டையில் பிரபு-மீனா

அஞ்சாதே படத்திற்குப் பிறகு ஆளே காணாமல் போயிருந்த நரேனும், அவரை மாதிரியே பரத்துடன் சேவல், ஜீவாவுடன் தெனாவட்டு படங்களில் ஜோடி சேர்ந்த பின் காணமால் போன பூனம் பஜ்வாவும் ஜோடி சேர்ந்திருக்கும் படம் தம்பிக்கோட்டை. நரேன்-பூனம் ஜோடியுடன் பிரபு-மீனா ஜோடியும் நடிக்கவுள்ள இப்படத்தை எழுதி, இயக்குகிறார் ஆர்.அம்மு ரமேஷ். காதல்கோட்டை, கந்தகோட்டை மாதிரியா தம்பிக்கோட்டை எனக் கேட்டால், இல்லை..இல்லை.. தம்பிக்கோட்டை என்பது தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை அருகில் உள்ள ஊர். திருப்பாச்சி அருவாளுக்கு பெயர் போன ஊர் என்பது மாதிரி, இது கத்திக்கு பேர்போன ஊர். அந்த ஊர் பெயரில் உருவாகும் காதல், சண்டைக் கதை இது என்கிறார் தயாரிப்பாளர். தம்பிக்கோட்டை ராஜேஸ்வரி பிலிம்ஸ் ஆர்.கே.சுரேஷ் டைரக்டர் அம்மு ரமேஷும், தயாரிப்பாளர் ஆர்.கே.சுரேஷும் அண்ணன் தம்பியாக்கும்.



விருதகிரி விஜயகாந்த்

ராவணா படப்பிடிப்பில் யானைக்கு மதம் பிடித்து ஒருவரை மிதித்துக் கொன்றதை பார்த்ததிலிருந்து தும்பிக்கையினைக் கண்டால் அலர்ஜியாகி விடுகிறார் ஐஸ்வர்யா ராய்.



குரு சிஷ்யன் சத்யராஜ்-கிரண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அசல் அஜீத்




# ஸ்பைடர் வுமனாக கரீனா



கரீனா கபூருக்கு சினிமாவுலகில் மட்டுமன்றி விளம்பர உலகிலும் தனி மரியாதை. நடிகர்களில் ஹிருத்திக் ரோஷன், ஷாருக்கான், அமீர்கான், அமிதாப்பச்சன் என்றால் நடிகைகளில் ஒரே யொருவர் கரீனா கபூர். போட்டிக்கு இருக்கும் மற்றொருவர் கத்ரீனா கைப். கரீனாவை விளம்பரங்களில் நடிக்க வைக்க முன்னணி நிறுவனங்கள் விரும்புகின்றன. இதற்காக கோடிகள் கொட்டித் தரவும் அவை தயார். மணிக்கூட்டு விளம்பரத்தில் புதிதாக நடித்திருக்கிறார் கரீனா. இந்த விளம்பரத்தில் ஸ்பைடர் வுமன் போல் கரீனாவை சித்தரித்திருக்கிறார்கள். இந்தி நடிகைகளுக்கு ஹொலிவுட் படங்களில் அதிலும் குறிப்பாக சூப்பர் ஹீரோ படங்களில் நடிக்க உள்ளூர ஆர்வம் உண்டு. கரீனாவின் ஆர்வத்தை இந்த விளம்பரம் பூர்த்தி செய்திருக்கும் என்கிறார்கள். இந்த விளம்பரத்தில் அவருக்கு கிடைத்த சம்பளம்... அவர் ஒரு படத்துக்கு வாங்கும் சம்பளத்தை விட அதிகமாம்.

திருமணத்திற்குப் பிறகும் நடிப்பேன் என்று கூறிவிட்டார் மீனா. சொன்ன மாதிரியே ரி.வி. சீரியல், மலையாளப் படங்கள் என்று ஆட்டத்தை தொடர்கிறார். இந்நிலையில், அவருக்கு ஒரு திடீர் பிரச்சினை. சும்மாலே பப்ளியாக இருக்கும் அவர், கல்யாணத்துக்குப் பிறகு பப்பாளி போல உப்பி வருகிறாராம். சாப்பாட்டில் கட்டுப்பாடு உடற்பயிற்சி என்று முயற்சி பண்ணியும் ரிசல்ட்...? அச்சச்சோ தான்.

## Saturday சினிமா

# எந்த மொழிக்கும் தயார் - நீது

யாவரும் நலம் படத்துக்குப் பின்னர் இந்திமற்றும் தெலுங்கு படங்களில் பிஸியான நடிகை நீது சந்திரா தற்போது விஷாலுடன் தீராத விளையாட்டு பிள்ளை படத்தில் நடித்து வருகிறார். அவர் அளித்துள்ள பேட்டியில், யாவரும் நலம் தமிழில் எனக்கு நல்ல அறிமுகத்தைக் கொடுத்தது. அதன்பின் வந்த கதைகள் பிடித்திருந்தாலும் வேடங்கள் பிடிக்காமல் இருந்தன. கவர்ச்சி வேடமாக இருந்ததால் சில கதைகளை மறுத்து விட்டேன். இப்போது நடித்து வரும் தீராத விளையாட்டு பிள்ளை கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள படம் என்றாலும், கதையோடு ஒட்டிய கவர்ச்சி தான் இருக்கும். கவர்ச்சியை எந்த இடத்திலும் திணிக்கவில்லை என்று கூறியுள்ளார். கதை பிடித்திருந்தால் எந்த மொழியிலும் நடிக்கத் தயாராக இருப்பதாக கூறும் நீது சந்திரா, தற்போது இந்தி மற்றும் கன்னடத்தில் தலா ஒரு படத்திலும், தெலுங்கில் 2 படங்களிலும் நடித்து வருகிறார்.



தம்பிக்கோட்டை
பிரபு-நரேன்

# நாயகியான வரதராஜப்பெருமாளின் மகள்



இலங்கையின் வடகிழக்கு மாகாண முதல்வராக இருந்தவர் வரதராஜப் பெருமாள். 91 இல் இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறிய போது இவரும் இந்தியா வந்தார். தற்போது வட இந்தியாவில் இந்தியாவின் பாதுகாப்புடன் தங்கியிருக்கிறார் அவர். அவரது மகள் நீலாம்பரி மலையாள படத்தின் மூலம் கதாநாயகியாக ஆகியிருக்கிறார். அவர் தற்போது நடித்து வரும் படம் பம்பாய் மிட்டாய். குமுதம் வார இதழுக்கு அவர் பேட்டியளித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது, 'சினிமாவில் நடிக்கணும்னு நான் நினைத்துக்கூட பார்க்கவில்லை. கல்லூரியில் படிக்கும் போது டில்லியில் நாடகங்களில் நடித்திருக்கிறேன். அங்கே நடிப்புப் பயிற்சியும் பெற்றிருக்கிறேன். ஆனால் இவ்வளவு விரைவாக சினிமா வாய்ப்பு வரும் என்று நினைக்கவில்லை. நான் தமிழ் நாட்டில் கும்பகோணத்தில் தான் பிறந்தேன். அங்கிருந்து தான் இலங்கை போனேன். எனது உறவினர்கள் கும்பகோணத்தில் தான் இருக்கிறார்கள்' இவ்வாறு அந்தப் பேட்டியில் கூறியிருக்கும் அவர், இந்திய அரசின் பாதுகாப்பு அப்பாவை போல தனக்கும் அளிக்கப்படுவதாக கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவ்வார மெயிலில் இவர்...**



# சில்வியோ பெர்லுஸ்கோனி

இத்தாலியப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி மீது அவரது தனிப்பட்ட வாழ்க்கை குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகள் இருந்து வந்த நிலையில் கடந்தவாரம் நபரொருவர் சிலை ஒன்றை வீசியதில் முகத்தில் காயமடைந்துள்ளார்.

இத்தாலியின் மிலன் நகரில் நடைபெற்ற கூட்ட மொன்றில் பெர்லுஸ்கோனி கலந்து கொண்டிருந்த நிலையில், மனநலம் குன்றியவரான மஸ்ஸிமோடர் டாக்ளியா (வயது 42) என்பவர் பெர்லுஸ்கோனி மீது சிலையினை வீசியுள்ளார்.

இதில் பெர்லுஸ்கோனியின் மூக்கும் பற்களும் உடைந்துள்ள நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இத்தாலியில் நீண்ட காலமாக பிரதமராக இருந்து வரும் பெர்லுஸ்கோனி, இத்தாலியை அழிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக குற்றஞ்சாட்டியே பெர்லுஸ்கோனி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பெண்களுடனான பாலியல் விவகாரங்கள் குறித்தும் ஊழல் மோசடிகள் குறித்துமான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுவந்த பெர்லுஸ்கோனி மீது புதியதொரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள அதேவேளை பொதுமகன் ஒருவர் பிரதமரை தாக்கியுள்ள சம்பவம் இத்தாலியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாலியின் நடுத்தர குடும்பமொன்றினைச் சேர்ந்த லுயி ரோஸா- போஸி தம்பதிகளுக்கு 1936 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 29 ஆம் திகதி மகனாகப் பிறந்த பெர்லுஸ் கோனிக்கு இரு இளைய சகோதரர்களும் உள்ளனர்.

தனது பாடசாலைக் கல்வியை சலேசியன் கல்லூரியில் நிறைவு செய்து பின்னர் மிலானிலுள்ள ஸ்ரற்றலே பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டப் படிப்பை நிறைவு செய்து 1960 ஆம் ஆண்டில் ஒப்பந்தக்காரராகத் தனது பணியினை ஆரம்பித்தார் பெர்லுஸ்கோனி.

அதனைத் தொடர்ந்து ஒப்பந்தத்துறையில் ஏற்பட்ட இழப்புகளைத் தொடர்ந்து 1973 இல் ஊடகத்துறையில் பிரவேசித்த அவர், பல தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவைகளை நடத்தி வருவதுடன், இத்தாலியில் கூடுதலான பதிப்புகளை வெளியிடும் பத்திரிகை ஒன்றையும் நடத்தி வருகின்றார்.

1980 களின் ஆரம்பப்பகுதியில் பெர்லுஸ்கோனியின் சொத்துகள் குறித்து சர்ச்சைகள் எழுப்பப்பட்டு பின்னர் வழக்குத் தொடரப்பட்டு சில சொத்துகள் அவரால் விற்பனையும் செய்யப்பட்டது.

1965 ஆம் ஆண்டில் மரினா என்றழைக்கப்படும் மரியா எல்விராவை திருமணம் செய்த பெர்லுஸ்கோனி, மரினா மூலம் இரு குழந்தைகளைப் பெற்ற நிலையில், 1980 ஆம் ஆண்டில் பிரபல நடிகையான வெரோனிகா என்பவருடன் இரகசியத் தொடர்பை வைத்திருந்த அவர் வெரோனிகா மூலம் மூன்று குழந்தைகளைப் பெற்றிருந்தார்.

இந்நிலையில், 1985 ஆம் ஆண்டில் தனது முதலாவது மனைவியான மரினாவை விவாகரத்துச் செய்து 1990 இல் நடிகையான வெரோனிகாவை இரண்டாம் தாரமாக மணம் புரிந்தார்.

பின்னர் வேறு பெண்களுடனும் பெர்லுஸ்கோனி தொடர்புகள் வைத்திருப்பதாகக் கூறப்பட்ட நிலையில், 2009 மேயில் நடிகையான வெரோனிகா பெர்லுஸ்கோனியிடமிருந்து விவாகரத்துக்கோரி வழக்குத்தாக்கல் செய்தார்.

தன்னைச் சூழ்ந்துள்ள சர்ச்சைகள் காரணமாக அரசியலில் புகுந்த பெர்லுஸ்கோனி, 1994 இல் மத்திய வலதுசாரிக் கட்சி மூலமாக தேர்தலில் போட்டியிட்டு பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதனைத்தொடர்ந்து 1994 முதல் 1995 வரையும் 2001 முதல் 2006 வரையும் 2008 முதல் தற்பொழுது வரையும் இத்தாலியின் பிரதமராக பணிபுரிகின்றார் பெர்லுஸ்கோனி.

பெர்லுஸ்கோனியுடன் தாம் தொடர்புகள் வைத்திருப்பதாகவும் அவர் தம்முடன் நெருங்கிப் பழகுவதாகவும் பல பெண்கள் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.


அதேவேளை, ஊழல் மோசடிகள் குறித்தும் குற்றச்சாட்டுகளும் பெர்லுஸ்கோனி மீது சுமத்தப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுகளை பெர்லுஸ்கோனி மறுத்துவரும் நிலையில், இவர்மீது நாட்டை அழிப்பதாகக் குற்றம் சுமத்தித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


**யோ.நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நலம் வாழ வாழ்த்துகிறேன்

ஆசு இரியர்களாக அன்பால்
அரவணைக்கப்பட்டவர்களே!
குற்றங்களை நீக்கும் குல விளக்குகளே!
சமூகக் குன்றின் மேல்-எமை
ஏற்றி வைத்தவர்களே!
நீங்கள் நலம் வாழ வாழ்த்துகிறேன்.

சமூகத்தின் அனைவருக்கும் பேதமின்றி
ஒளி கொடுத்தவர்களே!
சூரியனுக்குச் சூடும் நிலவுக்கு குளிரும்
சொல்லிக் கொடுத்து-ஒரே
உஷ்ணத்தின் உணர்வை வேறுபடுத்திக் காட்டி
யவர்களே!
நீங்கள் நலம்வாழ வாழ்த்துகிறேன்.
மலைகளின் உறுதியில்
மனசுக்கு உறுதி கொடுத்தவர்களே!

மானிடத்தின் மகிமை சொல்லிக் கொடுத்தவர்
களே!
மனித நேயமும் கற்றுத் தந்தவர்களே!
நீங்கள் நலம் வாழ வாழ்த்துகிறேன்.

செதுக்கப்படும் கல்தான் சிலையாகிறது
காயப்படும் மூங்கில் தான் கானம்பாடுகி
றது-என்று
அனுபவங்களை எமக்கு
அள்ளித் தந்தவர்களே!
நீங்கள் நலம் வாழ வாழ்த்துகிறேன்.

திக்குத் தெரியாத காட்டினிலே
திசைமாறிச் செல்லாது
இடுக்கண் தவிர்த்தெமக்கு
ஏற்றவழி காட்டித்தந்த வள்ளல்களே!
நீங்கள் நலம் வாழ வாழ்த்துகிறேன்.

அறம் காத்து,மறம் தவிர்த்து
அவனியில் வாழ்ந்திடவே
நல்ல வழி காட்டியோரே!
நானிலமும் போற்றிடவே!
நலமாக வாழ்த்துகிறேன்.

வளர் பிறையாய்,விடிவெள்ளியாய்
வெளிச்சம் தரும் தீபங்களே!
மிக்கச் சிறப்போடு
மேதினியில் வாழ்ந்திடவே!
வாழ்த்துகள் பல கோடி!வாழியவே; நீடுழி!

**மன்/பெரியமடுவூர்**
**நிஹாயா.ஏ.மஜீட் அலி,**
**ஆசிரியர் கலாசாலை,**
**கோப்பாய்.**

## சமாதானப் புறாவே சமரசம் கொண்டுவா...

*இத்தனை நாளாய் எத்தனை*
*துயரங்கள்*
*இன்னுமா நாட்டில் கொடு*
*மையின் அவலங்கள்!*
*போர் வெறி அரக்கனே;*
*போய்த்தொலை உனக்கினி*
*இடமில்லை!*
*நானில மாந்தரும் நடுத்தெரு*
*வீதியில்*
*நரியென அலைந்திட*
*பூமியே அதிர்ந்திடும்*
*குழல் மழை பொழிந்தது!*
*நாடில்லை வீடில்லை!*
*நல்கிட ஊரில்லை*
*எளியவர் வாழ்வினில்*
*ஏறிட வழியில்லை!*
*தாயது மடியினில்*
*தலையது சாய்த்துமே*
*உறங்கிடும் வேளையில்*
*உயிரது பிரிந்தது!*
*ஊரில்லை உறவில்லை*
*உருகிட வழியில்லை*
*பாரிய பசித்தொல்லை*
*பதறியும் பயனில்லை!*
*வளந்தரும் வாழ்க்கையும்*
*கலைந்திடும் காட்சியாய்*
*தொலைந்துமே போயிட*
*தொடர்கணை பாய்ந்தது!*
*கட்டிலும் சுழன்றது*
*தொட்டிலும் தொலைந்தது!*
*கட்டிய கணவனும்*
*கனவினில் கருகினான்!*
*எதிர்பார்த்த நனவுகள்*
*தூக்கத்தின் கனவென*
*தொலைந்துமே போயிடும்*
*இதுவொரு தொடர்கதை!*
*கங்குலே விலகிடு!*
*காலையே வழிவிடு*
*நெஞ்சினில் வழிந்திடும்*
*குருதியை நிறுத்திடு!*
*ஏழைகள் வாழ்க்கைகள்*
*எங்ஙனும் மலர்ந்திட*
*சமாதானப் புறாவே நீ...!*
*சமரசம் கொண்டு வா...!*

**அராலியூர்,**
**சி.செ.சக்திதாசன்.**

## கதையல்ல நிஜம்

*இனத் துரோகம்*
*மத மாற்றம்!*
*இயலாத் தன்மை*
*மனம் மாறல்!*

*சினங் கொள்வது*
*மிருகக் குணம்*
*சனங்களை வெல்லும்*
*தாராள குணம்!*

*கனமுற்ற மடியால்*
*வழியில் பயம்*
*மனக் காயமுற்றால்*
*ஆறாது ரணம்!*

*மனையடி சாஸ்திரப்படி*
*அமையும் மனை, நல்*
*வாழ்வுக்கு அமையும்*
*ஏணிப் படி!*

*வெல்ல முடியாது*
*வினைப் பயனை*
*சொல்லி முடியாது*
*அகதிகள் துயரக்கதை!*

**கவிக்குயிலன்.**

## இன்பம்

செந்தமிழ் தேன் கவிதை
செப்புதல் இன்பம்
செவிகுளிர அது கேட்டு
இரசிப்பது இன்பம்

காதல் கொண்டவளை
காண்பது இன்பம்
அவள் பார்வை
என் மீது படுதல் இன்பம்

இருமனதும் ஒருமனதாய்
இணைதல் இன்பம்
என்னவளை கைப்பிடிக்கும்
என் நினைவுகள் இன்பம்
அந் நினை வினால்– நான்
ஏங்குவது இன்பம்
ஏக்கத்தில் தூக்கம்
கெடுவது இன்பம்

**இணுவை**
**சுகந்தி.**

## யதார்த்தம்

தேனிலும்
இனிமையானது
தமிழ்!
தேனிலும்
கொடியது
சுடு சொல்

கவரி மானைப்
போல் வேண்டும்
மானம்!
காலத்தால்
அழியாதது
கல்வி

மன மொத
வாழ்விலே
இன்பம்!
இருமனம்
வேறுபட்டால்
அதுவே துன்பம்!

உயிர் விட்டுப்
போனால்
சவம்!
அந்த உயிர்
உள்ளவரை, தான்
சிவம்!

பால் கெட்டுப்
போனால்
உறையாது தயிர்!
பருவம் தப்பிய
பயிரும்
அப்படியே!

அதிகாரம் இருக்கும்
போது
ஆட்டம்!
அது இல்லாத
போது சேரும்
முகவாட்டம்!

தாய்
தந்தைக்குதவாத
பிள்ளை!
தரணியில் புகழோடு
வாழ்ந்தென்ன
நன்மை?

மதம் மாறும் மன
சுகள்
மந்தி!
சேர்ந்த மதத்தினை
மனசார
நினைப்பாரா சிந்தி

**கவிக்குயிலன்,**
**சேனையூர்-06.**

*உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்*
*வரவேண்டுமானால்*
**'Saturday மெயில்'**
**இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்**
*என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்..*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# உறவுகளைத் தேடி அலையாதீர்கள் உட்கார்ந்த இடத்திலேயே தேடலாம்

நீண்ட காலமாக எங்கு வாழ்கிறார்கள் என்றே தெரியாத நிலையில் பிரிந்து வாழும் உறவுகளுடன் இணைவதற்காக அவர்களைத் தேடி அலைகிறீர்களா? ஆனால் இன்று பலர் இருந்த இடத்திலிருந்து கொண்டே உறவுகளைத் தேடிக் கண்டுபிடிக்கிறார்கள். முகந்தெரியாத உறவுகளைக் கூடக் கண்டுபிடிக்கின்றனர். இந்த உதவியை பிரித்தவர்களை இணைக்கும் பணியை சமூக வலையமைப்பான பேஸ் புக் (Face Book) செய்து கொண்டிருக்கிறது.

ஜெஸ் பிராட்லி என்ற 14 வயதுச் சிறுமி முகம்தெரியாத தனது தந்தையை இந்த பேஸ் புக்கினூடாகக் கண்டு பிடித்துள்ளாளென லண்டனிலிருந்து வெளியாகும் 'டெய்லி ஸ்டார்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

லண்டன் வேல்ஸில் வாழும் இச்சிறுமியின் தாயும் தந்தையும் பிரிந்துவிட்டதால் இவள் தந்தையை பார்த்ததில்லை. ஆனால் தந்தையைக் காண விரும்பிய இச்சிறுமி தனக்கு விபரந்தெரிந்த காலம் முதல் தந்தையை தேட பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தாள். சுமார் 9 வருடத்தேடலுக்குப் பின்னர் தந்தையைக் கண்டுபிடித்துள்ளாள்.

ஜெஸ் பிராட்லி தனது தந்தையின் பெயரான 'கெவின் ராபர்ட்ஸ்' என்பதை பேஸ் புக்கில் தேடிய போதே அவள் தந்தையைக் கண்டு பிடித்துள்ளாள். தந்தையின் புகைப்படத்தை பேஸ் புக்கில் பார்த்த ஜெஸ் பிராட்லி 'நீங்கள் தான் எனது தந்தையாக இருக்க வேண்டும்' என ராபர்ட்டிற்குத் தகவல் அனுப்பியுள்ளாள்.

பிராட்லியின் தகவலையும் அவளின் புகைப்படத்தையும் பார்த்த ராபர்ட்ஸ் அவள் தனது மனைவியின் சாயலில் இருப்பதை உணர்ந்தார். தகவல் பரிமாற்றங்கள் தொடர்ந்து இடம்பெற இருவரும் தமது உறவை உறுதிப்படுத்தியதுடன் மீள இணைந்துள்ளனர்.

இந்த 'பேஸ் புக்' சமூக வலையமைப்பு ஹாட்வாட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மார்க் சக்கர்பேக் (Mark zuckerberk) என்பவராலும் அவரின் இரு நண்பர்களாலுமே உருவாக்கப்பட்டது. அப்பல்கலைக்கழகத்திற்குப் புதிதாக வரும் பேராசிரியர்களும் மாணவர்களும் அங்குள்ளவர்களைப் பற்றி அறிவதற்கான நோக்கிலேயே இது உருவாக்கப்பட்டது.

பின்னர் அமெரிக்க பல்கலைக்கழகங்களின் இடையிலான இணைப்பாக மாறி மேலும் மேலும் விஸ்தரிக்கப்பட்டு உலகளாவிய ரீதியிலான நட்பு இணைப்பு ஊடகமாக இன்று பயன்பட்டு வருகின்றது. இதனால் கடந்த 2004 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்ட இவ்விணையம் 5 வருடங்களில் 200 மில்லியன் பயனர்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த பேஸ் புக்கினால் சில மாதங்கள் முன்னர் 27 வருடங்களாக பிரிந்திருந்த தாயும் மகனும் இணைந்ததாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மனைவி விவாகரத்துச் செய்ததால் 2 வயதான மகனை கடத்திச் சென்றார் தந்தை. 27 வருடங்கள் தேடலின் பின் ஏதேச்சையாக பேஸ்புக்கில் காவின் பாரேஸ் எனும் கடத்தப்பட்ட சிறுவனின் பெயரை அவனின் சித்தி தேடியபோது 29 வயதான இளைஞனாக அவனை கண்டு பிடித்தார்.

தந்தை இறந்துவிட்ட பின் மனைவி, குழந்தைகளுடன் வாழும் அச்சிறுவனே கடத்தப்பட்ட அக்காவின் மகனென உறுதிப்படுத்திய பின் தாயும் மகனையும் அவர் இணைத்து வைத்துள்ளார்.

இதைத் தவிரவும் இன்று பாடசாலை காலம் முடிந்த பின் சிதறி வாழும் நண்பர்களையும், புலம்பெயர் உறவுகளை இணைத்து அவர்களிடையே நெருக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது இந்த பேஸ்புக்.

ஆனால், அநேக அலுவலகங்களில் மறைமுகமாகத் தடை செய்யப்பட்ட இணையத்தளமாகவும், பெரியவர்கள் விரோதியாக பார்க்கும் தளமாகவும் உள்ளது. இதில் இடம்பெறும் சில மோசடிகள், ஆள்மாறாட்டங்கள் நம்பகத்தன்மையை சற்று குறைப்பதுடன் பலர் அதிகளவு நேரத்தை வீணடிக்க இதனை பயன்படுத்துவதாலுமே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஆக்க உதவும் தீ தானே பலதை அழிக்கவும் செய்கிறது.



எம்.தயானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானிய மூளைக்காய்ச்சல்

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயானது காவிகளினால் காவப்படும் ஒரு வைரஸ் விலங்கு நோயாகும். இது மனிதனையும் பாதிக்கக்கூடும். ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயானது வெப்ப, இடைவெப்ப குளிர் ஆசிய நாடுகள் எல்லாவற்றிலும் தொற்றும் வாய்ப்புள்ளது.

நோய்க்கிருமி மனித நாட்டமுள்ள கியூலெக்ஸ் வகை நுளம்புகள், வைரஸ் பெருகும் வீட்டுப்பன்றி மற்றும் நீர் அல்லது சேற்றுப் பன்றி, பறவைகளிலிருந்து மனிதனுக்கு கடத்தப்படுகின்றது. Culex tritaeniorhyncus என்பது பிரதான காவி இனமாகும். இவை நீர் நிலைகள், வெள்ளமேற்பட்ட நெல் வயல்களில் பெருகுகின்றன. அதிகளவு நோயாளர்கள் கிராமப்புறங்களில் இனங்காணப்பட்டாலும் நகர மற்றும் நகரை அண்டிய பிரதேசங்களிலும் நோய் பரவலாம். குளிர் பிரதேசங்களில் சித்திரை அல்லது வைகாசி மாதங்களில் நோய் தொற்றும் காலம் ஆரம்பித்து புரட்டாதி அல்லது ஐப்பசி மாதம் வரை நீடிக்கலாம். வெப்ப மற்றும் இடை வெப்ப பிரதேசங்களில் இப்படியான தெளிவான காலவரையறையை அவதானிக்க முடியாத போதும் நோய்த்தாக்கம் மழைக்காலங்களில் அதிகரித்துக் காணப்படுகிறது. இப்பிரதேசங்களில் பயிர்ச் செய்கை வருடம் முழுவதும் நடைபெறுவதால் நோய்த்தாக்கம் வரண்ட காலப்பகுதியிலும் காணப்படலாம். அதிகமான ஆசிய நாடுகளில் பாரிய திடீர் நோய்த்தாக்கம் (Outbreak) 2–15 ஆண்டுகள் இடைவெளியில் ஏற்படுகின்றது.

இந்நோய் வைரஸ், புதிதாகத் தொற்றிய இடங்களில் எல்லா வயதினரையும் தாக்கினாலும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குருதிபாயம் ஆய்வுகளில் இருந்து ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தொடர்ந்தும் காணப்படும் பிரதேசங்களில் 15 வயதுக்கு முற்பட்ட வயதுடையவர்களையே தாக்குகின்றது என்பது தெரியவந்துள்ளது. 250–500 பேர்களில் ஒருவருக்கே இந்நோய்த் தொற்றானது குணங்குறிகளை வெளிக்காட்டுகின்றது. அதிகளவு நோய்த்தொற்று தொடர்ந்து காணப்படும் இடங்களில் அரைவாசிக்கு மேற்பட்ட ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயாளிகள் 4 வயதுக்கு முற்பட்ட சிறுவர்களாக இருக்கின்ற அதேவேளையில் அண்ணளவாக முழு நோயாளிகளும் 10 வயதிற்குட்பட்ட சிறுவர்களாவர். ஆனாலும் ஜப்பானிய மூளைக்காய்ச்சலுக்கு எதிரான தடுப்பூசி பரவலாக பாவனையிலுள்ள இடங்களில் இந்த வயதெல்லையானது வளர்ந்த சிறுவர்கள் அல்லது வளர்ந்தவர்களை நோக்கியதாகவுள்ளது.

ஜப்பான், கொரியா மற்றும் சீனாவின் சில பகுதிகள் ஜப்பானிய மூளைக்காய்ச்சலின் நோய்த்தாக்க வீதமானது கடந்த சில தசாப்தங்களுள் குறைந்துவருகின்றது. இதற்குப் பிரதான காரணம் இந்நோய்க்கெதிரான தடுப்பூசியின் பரவலான பாவனையாகும். இதைவிட சமூக பொருளாதார முன்னேற்றம், வாழ்க்கை நடைமுறை முன்னேற்றம், பன்றிகளின் உற்பத்தியில் ஏற்பட்ட கட்டுப்பாடு மற்றும் காவிகளுக்கெதிரான இரசாயன மருந்துகளின் பாவனை போன்றனவற்றையும் காரணங்களாகக் கூறலாம். பேர்மித்திரின் (permirhrin) மருந்து தோய்க்கப்பட்ட நுளம்புவலையின் பாவனையும் சிறிதளவில் இந்நோய்க்கு எதிராக பாதுகாப்பைக் கொடுக்கின்றது என ஒரு ஆராய்ச்சி கூறுகின்றது. ஆனாலும், சிறுபிள்ளைகளில் இந்நோய்க்கு எதிராகக் கொடுக்கும் தடுப்பூசி முறைக்கு வேறெந்த முறைகளும் ஈடாகாது. இந்நோயுள்ள பிரதேசங்களில் இருந்து இந் நோய் பற்றிய தரவுகள் மிகக்குறைந்தளவிலேயே வெளிக்கொணரப்படும். அதேவேளையில் இப் பிரதேசங்களுக்கு குறைந்த நாட்களுக்கு பயணஞ்செய்பவர்களில் இந் நோய் ஏற்படுவது அரிதாகும்.

**நோய்க்காரணி**

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் வைரஸ் காவிகளால் பரவும் பிளவிவிரிடே (Flaviririda) என்ற குடும்பத்தைச் சேர்ந்த தனியான RNA சங்கிலியைக் கொண்ட வைரஸ் ஆகும். நோயை உருவாக்கும் தன்மையில் இவ் வைரஸ் ஆனது டெங்கு வைரஸ் (Dengu Virus) மற்றும் West Nile Virus [மேற்கு–நைல் வைரஸ்] போன்ற அதே குடும்பத்தைச் சேர்ந்த ஆசிய நாடுகளில் அதிகளவில் காணப்படும் வைரஸ்களை ஒத்ததாகும். இந்த வைரஸின் பாதுகாப்பு உறையில் காணப்படும் கிளைக்கோ – புரதத்தில் சில இந்த வைரஸுக்குத் தனித் தன்மையானவை. அதேவேளையில் சில மற்றவற்றுடன் குறுக்கீட்டுத் தாக்கத்தில் ஈடுபடக் கூடியவையாகவும் சில நடுநிலையாக்கும் தன்மையுடையவையாகவும் காணப்படுகின்றன.

இந்த வைரஸின் பிரதான Genotype [ஜீனோ வகைகள்] புவியில் வேறுபாட்டை காட்டுபவையாக இருக்கும் அதேவேளையில் Sero type [குருதிபாய வகைகள்] மற்றும் வீரியத்தன்மை, நோய் விலங்கை நாடும் தன்மை என்பவை ஒத்ததாகவே இருக்கின்றது. நுளம்புக்கடியினைத் தொடர்ந்து ஆரம்ப வைரஸின் பெருக்கமானது, அவ்விடத்தில் காணப்படும் அல்லது அவ்வ[illegible] பிரதேச நிணநீர்க் குழியங்களில் நடைபெறுகின்றது. மைய நரம்புத் தொகுதிக்கு வைரஸானது பிரதானமாக குருதியினூடாகவே கடத்தப்படுகின்றது. ஜப்பானிய மூளைக்காய்ச்சலை உறுதிப்படுத்துவதற்கு ஆய்வு கூடப் பரிசோதனைகள் அவசியமாகின்றன. நோய்க்கான காரணம் குருதிப் பாயத்தைப் பயன்படுத்தி Igm என்கின்ற பிறபொருள் எதிரி உடல்களை ELISA முறையில் கண்டறிவதன் மூலம் அறியப்படுகின்றது. எல்லா நோயாளிகளினதும் மூளைமுண்ணான் மாய்பொருளிலும் குருதியிலும் இந்நோய்க்கு தனித் தன்மையான Igm எனப்படும் பிறபொருள் எதிரிகள் நோய் உருவாகி 7 நாட்களுக்குள் காணப்படும். இதை விட வெளிக்களங்களில் (field) நோயினை உறுதிப்படுத்துவதற்கு சாதாரணமாக குருதிப் பாயத்தினை பரிசோதிப்பதன் மூலம் ஜப்பானிய மூளைக்காய்ச்சலுக்கு தனித் தன்மையான பிறபொருள் எதிரியின் மொத்த அதிகரிப்பு கணிக்கப்படுகின்றது. அரிதாக குருதி அல்லது மூளை முண்ணாண் மாய்பொருளின் இழைய வளர்ப்பின் மூலம் வைரஸ் அறியப்படுகின்றது. சில வேளைகளில் இறந்தவர்களின் மூளையைப் பரிசோதிப்பதன் மூலம் வைரஸ் அரிதாக அறிப்படலாம்.

**நோய்க்கெதிரான நீர்ப்பீடன செயற்பாடு**

ஜப்பானிய மூளைக் காய்ச்சலுக்கு எதிரான பாதுகாப்பானது நடுநிலைப்படுத்தும் பிறபொருளெதிரிகள் உருவாக்கத்துடன் தொடங்குகிறது. விலங்கு மாதிரிகள் மற்றும் தடுப்பூசிகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த பிறபொருளெதிரிகளின் அளவு 1:10 ஆக இருக்கும் போது பாதுகாப்புத் தன்மை தொடங்குவதாக அறியப்பட்டுள்ளது. கலங்களால் நெறிப்படுத்தப்படும் நீர்ப்பீடனமும் இந்த வைரஸுக்கு எதிராக காணப்படுவதாக எலிகளில் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து அறியப்பட்டுள்ளது.

**குணங்குறிகள்**

நோயரும்பு காலம் 4–14 நாட்களாகும். பொதுகுணங்குறிகளாக திடீரென ஆரம்பிக்கும் காய்ச்சல், குளிர்தன்மை, தசைகளில் ஏற்படும் நோவு, அறிவு மயக்கம், அத்துடன் கழுத்து மடிக்க முடியாத தன்மை என்பவை காணப்படுகின்றன. சிறுவர்களில் குடல்நோவும் வாந்தியும் ஆரம்ப பிரதான குணங்குறிகளாக காணப்படும். அத்துடன் வலிப்பும் பொதுவாக ஏற்படுகின்றது. இந்நோய் சில வேளைகளில் சாதாரண நோயாக எவ்வித விளைவும் ஏற்படாமலே குணமடைந்துவிடும். அதேவேளை, சில வேளைகளில் தீவிரமான நோயாக மாறி மனநிலையில் மாற்றம், நரம்பியல் குறைபாடுகள் மற்றும் அறிவற்ற நிலை (Coma) யையும் ஏற்படுத்தலாம். ஒருவருடத்தில் இந் நோயினால் பாதிக்கப்படுகின்ற 50,000 நோயாளிகளில் கிட்டத்தட்ட 10,000 பேர் இறந்துவிடுகின்றார்கள். தப்புபவர்களில் 15,000 நோயாளிகள் நரம்புமண்டலத்துடன் சம்பந்தமான அல்லது மனநோய் உடையவர்களாக மாறுகின்றார்கள். இவர்கள் தொடர்ந்து வாழ்வியல் பராமரிப்பு தேவைப்படுபவர்களாக இருக்கின்றார்கள் பிரதானமாக இந்நோய் சிறுவர்களில் ஏற்படுகின்றது. கர்ப்பிணித்தாய்மாரில் ஏற்பட்ட தாக்கம் பற்றிய தகவல்கள் மிகவும் குறைவாகவே உள்ளது. ஆனால் இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து இந்நோயானது கர்ப்பிணிகளில் கருச்சிதைவை ஏற்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது. இந்நோயுடன் பிறநோய்களின் (HIV) சேர்க்கையால் ஏற்பட்ட தாக்கம் பற்றி இதுவரை அறியப்படவில்லை.

**சிகிச்சை**

இந்நோய்க்கு தனித்துவமான சிகிச்சை இல்லை. ஆனால், பக்கத்துணையான சிகிச்சை அதிதீவிர அவசரசிகிச்சைப்பிரிவில் வழங்கப்படுவதால் இந்நோயினால் ஏற்படும் இறப்புகள் குறைக்கப்படுகின்றன இந்தியாவில் 12506 நோயாளிகளில் மேற்கொள்ளப்பட்ட பின்நோக்கிய ஆய்வுகளில் இருந்து இந்நோயினால் ஏற்படுகின்ற இறப்புக்கு நுரையீரலுக்கு புரைக்கேறுதல் ஒட்சிசனின் போதாத்தன்மை (O2) குருதியில் வெல்லத்தின் அளவு குறைவடைதல் மற்றும் கட்டுப்படுத்த முடியாத வலிப்பு என்பன காரணங்கள் என அறியப்பட்டுள்ளது. ஆகவே, பக்கத்துணையான சிகிச்சையானது பிரதானமாக வாயு பரிமாற்றம், வலிப்பைக்கட்டுப்படுத்தல், மூளையில் நீர்பாயத்தின் அளவைக் (oedeme) கட்டுப்படுத்தல், உடலின் நீர்த்தன்மையைப் பேணல், காய்ச்சலை கட்டுப்படுத்தல், போசாக்கு மற்றும். ஏனைய தொற்றுநோய்களின் தொற்றைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

**கட்டுப்படுத்துவதற்கான வேறுபட்ட அணுகுமுறைகள்**

நான்கு முக்கிய அணுகுமுறைகள் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

நோய்க்கெதிரான தடுப்பூசி, காவிநுளம்புகளைக் கட்டுப்படுத்தல், நோய்க்கிருமியைப் பெருக்கும் பன்றி போன்ற விலங்குகளைக் கட்டுப்படுத்தல், சுற்றாடலை கட்டுப்படுத்தல் என்பனவாகும்.

டாக்டர் ந.ராஜேஷகண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2010ஆம் ஆண்டு அதிக வெப்பமாக இருக்கும்

கடந்த 160 ஆண்டுகளில் இல்லாத விதமாக 2010 ஆம் ஆண்டு அதிக வெப்பம் நிறைந்ததாக இருக்கும் என இங்கிலாந்து வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இதுதொடர்பாக இங்கிலாந்து வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்தியில், இயற்கைப்பருவநிலை மாற்றம் காரணமாகவே வெப்பம் அதிகரிக்கும் என்ற போதிலும், 2010 ஆம் ஆண்டில் மனித குலத்தால் ஏற்பட்ட பருவநிலை மாற்றம் காரணமாகவே புவியின் வெப்பம் அதிகரிக்கும். இந்த வெப்பத்தின் அளவு கடந்த 1998 இல் காணப்பட்டதை விட அதிகமாக இருக்கும்.

கடந்த 1961 முதல் 1990 வரையிலான காலகட்டத்தில் உலகம் அனுபவித்த சராசரி வெப்பத்தின் அளவை விட, 2010 ஆம் ஆண்டில் உலகளவில் 0.6 டிகிரி வெப்பம் அதிகமாக( அதாவது 14.58 டிகிரி) காணப்படும்.

2010 ஆம் ஆண்டு மட்டுமன்றி வரும் 2019 வரையிலான காலகட்டம் வரை வெப்பத்தின் தாக்கம் அதிகமாகவே இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரத்தக் குழாய்களுக்குள் நீந்திச் செல்லும் நுண்ணிய ரோபோக்கள்

மனிதனின் இரத்தக் குழாய்களுக்குள் நீந்திச் செல்லும் நுண்ணிய ரோபோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவுஸ்திரேலியாவின் மோனாஷ் பல்கலைக்கழக நுண் பௌதிகம் மற்றும் நானோ பௌதிக ஆய்வுக் கூடத்தில் இந்த ரோபோக்களுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

இரத்தக்குழாய் அடைப்புகளின் காரணமாகச் செய்யப்படும் சிக்கலான அறுவை சிகிச்சைகளில் இந்த ரோபோக்கள் உதவிகரமாக இருக்குமாம். இரத்தக் குழாய்களுக்குள் ஊசி மூலம் இந்த ரோபோக்களைச் செலுத்தி செயற்பட வைக்க இயலும்.

ஒரு மில்லி மீற்றரில் கால்பங்கு பெரியதான இந்த ரோபோக்களை Piezoelectricity ஐப் பயன்படுத்தி இயங்கச் செய்ய முடியும் என்கிறார்கள். நுண் எந்திரவியல் மற்றும் நுண் பொறியியல் அறிஞர்கள் சில வகையான படிகங்கள்,பீங்கான்கள் இவற்றின் மீது அழுத்தம் கொடுக்கும் போது மின்னோட்டம் தூண்டப்படுகிறது என்பதுதான் Piezoelectricity தத்துவம். இந்தத் தத்துவத்தைப் பயன்படுத்தியே நம்முடைய வீட்டில் எரிவாயு அடுப்பை பற்றவைக்கும் காஸ் லைட்டர்கள் இயக்குகிறோம்.



அறுவை சிகிச்சைகளில் சாதாரணமாக Catheters எனப்படும் குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை உண்டாக்கும் காயங்களும் தழும்புகளும் பெரிய அளவில் இருக்கும். மேலும், நுண்ணிய பகுதிகளை இந்த Catheter குழாய்கள் சென்றடைய முடிவதில்லை. இனி மேல் இதுபோன்ற நுணுக்கமான அறுவை சிகிச்சைகளுக்கு இந்த நுண்ணிய ரோபோக்கள் பயன்படும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## சூரிய குடும்பத்தில் மூன்று புதிய கோள்கள் கண்டுபிடிப்பு

சூரிய குடும்பத்தில் பூமி, செவ்வாய், புதன் உள்ளிட்ட கிரகங்கள் உள்ளன. இந்த நிலையில் தற்போது மேலும் 3 புதிய கிரகங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றை இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த வானியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பூமியை விட பெரியது.

இங்கிலாந்தில் நியூசவுத் வேல்ஸில் உள்ள ஆங்கிலோ-



அவுஸ்திரேலியன் டெலஸ் கோப் மூலமும் அவுஸ்திரேலியாவில் ஹவாலியில் உள்ள 'கெக்' டெலஸ்கோப் மூலமும் அடையாளம் கண்டனர்.

இந்தப் புதிய கோள்களும் பரப்பளவில் இது பூமியை விட 5 முதல் 25 மடங்கு பெரியது. இது சூரியனில் இருந்து 27.8 ஒளி வருடங்களுக்கு அப்பாலுள்ளது. இவற்றை வெறுங்கண்ணால் பார்க்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்ல மறையும் பின்னல் அழகு





எங்கே சென்றது நம் பாரம்பரிய பின்னல் முடியலங்காரம்? எங்கள் கிராமத்துப் பெண்மணிகள் முடியை அழுத்தி வாரி சிடுக்கெடுத்து எண்ணெய் வார்த்து கலர் கலராக சணல், சில்க் ரிப்பன் என்று அவரவர் வசதிக்கேற்றபடி நுனியில் சேர்த்துப் பின்னிப் பூவைத்து அழகாக நடந்து வருவர். ஆனால், இப்போது? ஹூம், 'ஆத்தாடி மாரியம்மா' என்று சிலிர்த்துப் பேயாடிக் கொண்டு பவனி வருகின்றனர். இரவில் பார்த்தால் பயமாக இருக்கிறது.

பாடசாலை செல்லும் நாளில் இரட்டைப் பின்னல் பின் ஒற்றைப் பின்னல் பல்கலைக்கழகங்களிலோ 'இதென்ன கட்டுப் பெட்டியைப் போல் தலை முடியைப் பின்னுவது. அவிழ்த்துவிடு. அது நம் விடுதலை மனப்பான்மையை முழுவதும் பிரதிபலிக்கட்டும்'. பிறகென்ன தலைவிரி கோலம்தான்.

மேலை நாட்டைப் பார்த்து சூடு போட்டுக் கொண்டு அவர்கள் மனதில் அது அழகு சேர்ப்பதாகவும் நாகரிகமாக இருப்பதாகவும் கனவு காண்கின்றனர். சிக்குப் பிடித்துக் கொண்டு காணச் சகிக்கவில்லை என்பதுதான் உண்மை.


பின்னல் போய் வந்தது 'போனி டெயில்' பின் முடி கொட்டி நாடில்ஸானதுடன் பரட்டைத் தலைதான் மிஞ்சும்.

உண்மை நிலை இப்படியிருக்கும் போது கொஞ்சம் கனவாவது காண்போமே!

படிய வாரிய தலை
முத்தில்லா கொலுசு
ஒற்றைப் பின்னல்
கை நிறைய வளையல்
கட்டிக் கொள்ள சேலை
சாயம் இல்லா உதடு
மை இல்லா கண்கள்
நகம் இல்லா விரல்கள்
கவலை இல்லா சிரிப்பு
நல்லெண்ணெய் தேய்த்துவிட்டு
நன்றாக ஊற விட்டு
சிகைக்காய் தூளெடுத்து
சிகையெங்கும் பரவ விட்டு
வாசனைப் பொடி போட்டு
வாகாக அலசி விட்டு
சாம்பிராணிப் புகை போட்டு
சந்தனம் போல் மணக்கவிட்டு
பாசமுடன் விரல்களினால்
பட்டுப் போல் கோதி விட்டு
அழகாக வகிடெடுத்து
அளவாகப் பிரித்தெடுத்து
அம்மா இடும் பின்னலில்தான்
அம்மம்மா எத்தனை ரகம்!
ஆயிரங் கால் பின்னல்
அழகான ஒற்றைப் பின்னல்
பள்ளிக் கென்றே பக்குவமாய்
மடித்துக் கட்டும் இரட்டைப்
பின்னல்
பின்னாலே பாலம் கட்டும்
பாரமில்லா சைக்கிள் பின்னல்
கூட்டமாய் பூக்கள் தைத்த
குஞ்சலம் வைத்த பின்னல்...

**- கவிநயா**

# அழகான பெண்களின் நாடு



உலகிலேயே அழகானவர்கள் நோர்வே நாட்டுப் பெண்கள் என்று ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. இங்கிலாந்துப் பெண்களுக்குக் கடைசி இடம் கிடைத்தது.

டென்மார்க்கில் 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இணையத்தளம் www.forbeautifulpeopleonly.com இங்கிலாந்தில் அது 2005 இல் அறிமுகமானது. உலகில் மிக அழகானவர்களைத் தேர்வு செய்வது, அதன் அடிப்படையில் அழகானவர்களைக் கொண்ட நாடு எது என அறிவிப்பதுதான் அதன் வேலை. தன்னை அழகாக நினைப்பவர்கள் இந்த இணையத்தளத்தில் விபரங்களைத் தந்து படத்தை (அழகிய) அப்லோட் செய்ய வேண்டும். அதை இணையத்தள உறுப்பினர்களில் நான்கு பேர் (விண்ணப்பிப்பவர் பெண் என்றால் பரிசீலிப்பவர்கள் ஆண்கள்) ஆராய்வார்கள். நான்கு பதில்களில் முடிவை அறிவிப்பார்கள். அதாவது [illegible] அழகானவர், பரவாயில்லை, இல்லை, சே... சுத்த மோசம் எனக் கருத்தைத் தெரிவிப்பார்கள்.

நாலவரில் எது பெரும்பான்மை பெறுகிறதோ, அதன் அடிப்படையில் நீங்கள் அழகா... இல்லையா... என அறிவிப்பார்கள். உங்கள் ஈமெயிலுக்குப் பதில் வந்துவிடும். நீங்கள் அழகு பட்டியலில் சேர்ந்து விட்டால் இணையத்தளத்தின் உறுப்பினராகி விடுவீர்கள். பிறகு மற்ற அழகன், அழகிகளைத் தேர்வு செய்யும் வாத்தியார் வேலை ஈமெயில் மூலம் உங்களுக்குத் தரப்படும். இப்படிச் சில நாடுகளில் மட்டும் வெளுத்து வாங்கி வந்த இணையத்தளம் அண்மையில் உலகம் முழுவதும் அறிமுகமானது. அதில் நடத்திய ஆய்வு அடிப்படையில் விண்ணப்பித்த 100 நோர்வே பெண்களில் 76 பேரழகி எனத் தேர்வு செய்யப்பட்டு முதலிடம் பிடித்தனர். ஆண்களில் சுவீடன் ஆண்களில் 100 க்கு 65 பேர் பாஸ் ஆகினர். இந்தப் பட்டியலில் இங்கிலாந்துப் பெண்களுக்குக் கடைசி இடமே மிஞ்சியது. நல்லவேளை நம் நாட்டில் இந்த இணையத்தளத்துக்கு இன்னும் அதிகளவில் விண்ணப்பங்கள் போகவில்லை. அதனால் பட்டியலில் நம் நாடு இல்லை. இருந்திருந்தால் நோர்வே முதலிடம் பிடித்திருக்க முடியுமா?

## ஒரு நாள் போதுமா...?

ஒரு நாள் மட்டும் கொஞ்சிக் குலாவி உடலுறவு கொள்ளும் குறுகிய கால உறவுகளை குறித்து ஆண்களும் பெண்களும் என்ன நினைக்கிறார்கள் என்பது குறித்து ஆராய்ச்சியில் இறங்கியது டக்காம் பல்கலைக்கழகம்.

இந்த அனுபவத்தைப் பெற்ற பெண்கள் பெரும்பாலும் குற்ற உணர்வில் உழல்வதாகவும் இனிமேல் இத்தகைய உறவுகள் வேண்டாம் என மறுநாள் காலையில் அவர்கள் நினைப்பதாகவும் இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

ஆண்களில் 23 வீதத்தினரும் பெண்களில் 58 வீதத்தினரும் இந்த அனுபவத்தை [எல்லாம் முடிந்த பின்] சீச்...சீ என்றிருக்கின்றனர்.

1743 பேரைக் கொண்டு விரிவாக நடத்தப்பட்ட இந்த ஆராய்ச்சி பெண்களின் மன நிலையையும், ஆண்களின் மன நிலையையும் பட்டியலிட்டிருக்கிறது.

அதாவது பெண்கள் நீண்டகால உறவுப் பிணைப்பையும், கரிசனை, அன்பு ,கவனிப்பு கலந்த துணையையும் விரும்புவதாகவும், ஆண்கள் 'அழகான' பெண்ணை விரும்புவதாகவும் இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

தாங்கள் பயன்படுத்தப்பட்டு விட்டதாகவும், நினைத்ததை விட மோசமானதாகவே இந்த அனுபவம் இருப்பதாகவும் பல பெண்கள் வருத்தம் தெரிவித்திருக்கையில், தனக்கு கிடைத்த துணை அழகாய் இல்லை என்றே பல ஆண்கள் வருத்தம் தெரிவித்தார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# மறு பிரவேசத்தில் எழுச்சி

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் வீரர்கள் சிலர் காயம், 'போர்ம்' இல்லாதது உட்பட பல காரணங்களால் சில காலம் போட்டியில் பங்கேற்க முடியாத நிலையேற்படுகிறது. மீண்டும் கிரிக்கெட் அரங்கில் காலடி வைக்கும் பொழுது பழைய 'போர்மை' மீட்க முடிவதில்லை. ஆனால், ஒருசில வீரர்கள் தங்களது மறு பிரவேசத்தில் எழுச்சி கண்டு வெற்றி காண்கிறார்கள். இந்த வரிசையில் சில வீரர்களை இங்கு காணலாம்.

இந்திய அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் 2007 உலகக்கிண்ண 'ருவென்ரி-20' போட்டியின் இறுதியாட்டத்தில் இவர் பிடித்த 'கேட்ச்' காரணமாகத்தான் இந்திய அணி சாம்பியன் கிண்ணத்தை வென்றது என்றால் மிகையல்ல. அதி விரைவாக வளர்ச்சி கண்ட இவர் களத்தில் ஆவேசமாகப் போராடுவதில் வல்லவர். அதேநேரம், எதிரணியினரைச் சீண்டுவதிலும் கெட்டிக்காரர். இவரது இந்தக் குணம் 2008 ஐ.பி.எல். தொடரில் ஹர்பஜனுடன் மோதலில் முடிந்தது. இதையடுத்து 'போர்ம்' பிரச்சினையால் அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

தொடர்ந்து அணியில் இடம்பிடிக்க நீண்டகாலம் போராடி வந்தார். காலம் கனிந்தது. 19 மாதங்களுக்குப் பின் திடீரென இந்திய அணியில் இடம் கிடைத்தது. இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வாய்ப்புப் பெற்ற இவர் வேகப்பந்து வீச்சில் அசத்தத் தொடங்கினார். போட்டியில் 6 விக்கெட் வீழ்த்தி ஆட்டநாயகன் விருது பெற்றார். அடுத்து 'ருவென்ரி-20' ஒருநாள் தொடரில் சாதிக்கக் காத்திருந்த இவருக்கு பன்றிக் காய்ச்சல் தொற்றிக்கொள்ள பாவம் தற்போது ஓய்விலிருந்து வருகிறார். மீண்டும் எழுச்சி காண்பார் என உறுதியாக நம்பலாம்.

**திடீர் வாய்ப்பு:**

2007 உலகக் கிண்ணத் (50 ஓவர்) தொடருக்குப் பின் அணியிலிருந்து நீக்கப்பட்ட டிராவிட் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் திடீரென இந்திய ஒருநாள் அணியில் சேர்க்கப்பட்டார். தனது தேர்வை நியாயப்படுத்தும் விதத்தில் டிராவிட் இலங்கையில் நடத்த முத்தரப்புத் தொடர் சாம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்தார். தனது பணியைச் சிறப்பாகச் செய்த டிராவிட்டுக்குப் 'பரிசாக' இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) அவரை மீண்டும் ஒருநாள் போட்டிக்கான அணியிலிருந்து நீக்கி அழகு பார்த்தது. தற்போது மீண்டும் டெஸ்ட் போட்டியில் ஆதிக்கம் செலுத்தும் இவர் விரைவில் ஒருநாள் கிரிக்கெட்டிலும் எழுச்சி காணலாம்.

**பொண்ட் 'பவர்':**

நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷேன் பொண்ட். 2001/02 இல் அணியில் இடம் பிடித்து அசத்தி வந்த இவரை, நியூஸிலாந்து கிரிக்கெட் சபை 2008 ஜனவரியில் மத்திய வீரர்கள் ஒப்பந்தத்திலிருந்து நீக்கியது. இதனால் வெறுப்படைந்த இவர் 2008 மார்ச்சில் இந்தியன் கிரிக்கெட் லீக் அமைப்பில் டில்லி ஜயன்ட் அணியில் இணைந்தார்.

18 மாதங்களுக்குப் பின் அதிலிருந்து விலகிய இவருக்கு தேசிய அணியில் மீண்டும் வாய்ப்புக் கிடைத்தது. இலங்கை முத்தரப்பு டெஸ்ட் தொடரில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தவிர, சாம்பியன்ஸ் கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் எழுச்சி கண்ட பொண்ட் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

**மறுபிறவி யூசுப்:**

ஒரு நாள் போட்டிகளில் 9,000, டெஸ்ட் போட்டிகளில் 7,000 ஓட்டங்களுக்கு மேல் குவித்தவர் இந்த பாகிஸ்தான் வீரர் முகமது யூசுப். 2007 இல் இந்தியன் கிரிக்கெட் லீக்கில் (ஐ.சி.எல்.) இணைந்தார். பின் பாகிஸ்தான் தேசிய அணியில் விளையாட வேண்டும் என்பதற்காக ஐ.சி.எல். அமைப்பிலிருந்து விலகினார். பின் ஐ.பி.எல். இல் இணைந்த இவரை எந்த அணியும் ஏலத்தில் எடுக்கவில்லை. தேசிய அணியிலும் புறக்கணிக்கப்பட்டு வந்தார் இவர். திடீரென அடித்த அதிர்ஷ்டத்தால் தற்போது பாகிஸ்தான் அணிக்குக் கப்டனாகி ஜொலிக்கிறார்.

**போதை 'ஆசிப்':**

உள்ளூர் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி பாகிஸ்தான் அணியில் இடம்பிடித்தவர் முகமது ஆசிப். 2008 இல் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்று பாகிஸ்தான் திரும்பிய இவர் டுபாய் விமான நிலையத்தில் போதைப்பொருள் வைத்திருந்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்டார். இதையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி.) ஆசிப்புக்கு ஒரு ஆண்டு காலம் போட்டியில் விளையாடத் தடை விதித்தது. பின் மீண்டும் அணியில் இடம்பிடித்த இவர் நியூஸிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் 19 விக்கெட் வீழ்த்தி எழுச்சி கண்டுள்ளார்.




# விவாகரத்துக்கு சென்ற விவகாரம்

கோல்ப் நட்சத்திரம் டைகர்வூட்ஸுக்கு இன்னொரு 'அடி'. இதுவரை விவாகரத்து செய்வதில் மனைவி எலின் உறுதியாக இருக்கிறாராம்.

உலகின் நம்பர் வன் கோல்ப் வீரர் அமெரிக்காவின் டைகர்வூட்ஸின் காதல் லீலைகள் சமீபத்தில் அம்பலத்துக்கு வந்தது. அவருடன் தொடர்புடைய பெண்களின் பட்டியல் 14 பேரையும் தாண்டி நீடித்து வருகிறது.

சமீபத்தில் புளோரிடாவில் உள்ள தனது வீட்டின் அருகில் கார் விபத்தில் சிக்கி டைகர் வூட்ஸ், காயமடைந்தார். இதிலிருந்து இவரது தனிப்பட்ட வாழ்க்கையில் சிக்கல் ஆரம்பமானது.

செக்ஸ் லீலையில் சிக்கிய டைகர் வூட்ஸ் குடும்ப வாழ்க்கையில் குழப்பம் ஏற்பட்டது. மனைவி எலின் நார்டிக்ரிலின் கட்டளைக்குப் பயந்து டைகர் வூட்ஸ் கோல்ப் விளையாட்டிலிருந்து கால வரையறையின்றி விலகியிருக்கப்போவதாக அறிவித்தார். தனது மனைவிக்கு நல்ல கணவராகவும் குழந்தைக்கு நல்ல அப்பாவாகவும் இருப்பேன் என்று கூறியிருந்தார். மனைவி தன்னை விட்டுப் பிரிந்து செல்லாமலிருக்க டைகர்வூட்ஸ் பேரம் பேசி வருவதாகக் கூறப்பட்டது.

இந்த நிலையில் டைகர் வூட்ஸை விட்டு அவரது மனைவி எலின் பிரிய முடிவு செய்திருப்பதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கிறிஸ்மஸ் பண்டிகை முடிந்த பிறகு அவர் இது தொடர்பாக நீதிமன்றத்தில் விவகாரத்து மனுத்தாக்கல் செய்ய இருப்பதாக கூறப்படுகிறது. தற்போது எலின் திருமண மோதிரத்தை அணிவதில்லை. இதனால் அவர் டைகர் வூட்ஸை பிரிவது 100 சதவீதம் உறுதி என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

33 வயதான டைகர் வூட்ஸ், சுவீடனைச் சேர்ந்த 29 வயதான மொடல் அழகி எலின் நார்டிக்ரினை 2004 ஆம் ஆண்டு மணந்தார். இந்தத் தம்பதிக்கு ஷாம் (2 வயது) என்ற மகளும், சார்லி (10 மாதம்) என்ற மகனும் உள்ளனர்.

இது குறித்த ஏ.பி.சி. மற்றும் 'பீப்பிள்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில், 'டைகர் திருந்த வாய்ப்பில்லை என எலின் நம்புகிறார். எனவே, விவாகரத்து செய்வது நூறு சதவீதம் உறுதி. தனது வக்கீல்களுடன் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க மாட்டார். தற்போது இரண்டு பிள்ளைகளுடன் தனித்து வசித்து வரும் இவர், கிறிஸ்மஸ் பண்டிகையை, டைகரை விட்டு விலகி, வேறு எங்காவது சென்று கொண்டாடத் திட்டமிட்டுள்ளார். கிறிஸ்மஸ் பண்டிகைக்குப் பின் விவாகரத்தை அதிகாரபூர்வமாக அறிவிப்பார்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் எலின் பிரியப் போகும் சோகத்திலிருக்கும் டைகருக்கு, மகிழ்ச்சியான மற்றொரு செய்தி கிடைத்துள்ளது. ஏ.பி.சி. செய்தி நிறுவனம் நடத்திய வாக்கெடுப்பில் கடந்த 10 ஆண்டுகளின் சிறந்த வீரராக டைகர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். மொத்தமுள்ள 142 வாக்குகளில் இவர் 56 வாக்குகளுடன் முதலிடத்தை தட்டிச் சென்றார். அடுத்த இடத்தை அமெரிக்க சைக்கிள் பந்தய வீரர் லான்ஸ் ஆம்ஸ்ரோங் (33 வாக்கு) பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியை அகற்ற மோதியவர்கள்



ஐ.பி.எல். தலைவர் பதவியிலிருந்து லலித் மோடியை அசைக்க முடியவில்லை. 2012 வரை இவரே தலைவராக நீடிக்கவுள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ.) சார்பில் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்புத் தொடங்கப்பட்டது. இதன் தலைவர் மற்றும் ஆணையாளராக லலித் மோடி நியமிக்கப்பட்டார். இவரை நீக்க பி.சி.சி.ஐ. நிர்வாகிகள் சிலர் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக செய்திகள் வெளியாயின. இந்தச் சூழலில் நேற்று முன்தினம் மும்பையில் ஐ.பி.எல். நிர்வாகக் குழுக் கூட்டம் நடந்தது.

இதில் பங்கேற்ற பி.சி.சி.ஐ.தலைவர் சஷான்க் மனோகர் கூறுகையில்;

'லலித் மோடியை நீக்க இருப்பதாக வெளியான செய்தி தவறானது. மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வரும் இவர்2012 வரை தலைவர் பதவியில் நீடிப்பார்' என்றார்.



முதலில் லலித் மோடியை ஐ.பி.எல். தலைவர் பதவியிலிருந்து நீக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை (பி.சி.சி.ஐ.) நிர்வாகிகள் சிலர் திட்டமிட்டு காய் நகர்த்தினர்.

லலித் மோடியின் சாமர்த்தியத்தால் வர்த்தக ரீதியாக ஐ.பி.எல். வளர்ச்சி கண்டது. ஒளிபரப்பு உரிமை மூலம் 8 ஆயிரத்து 200 கோடி ரூபாவைச் சேர்த்து ஒட்டுமொத்தமாக 11 ஆயிரம் கோடி ரூபா அளவுக்கு வருமானம் குவிந்தது.

தவிர, கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐ.பி.எல்., 'ருவென்ரி-20' தொடரை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். அடுத்த ஆண்டு மார்ச் மாதம் மூன்றாவது தொடரை நடத்துவதற்கான பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

இந்தச் சூழலில் பி.சி.சி.ஐ. நிர்வாகிகள் சிலருக்கு மோடியின் செயல்பாடு பிடிக்கவில்லை. அளவுக்கதிகமாக அதிகாரம் செலுத்துவதாகக் குற்றஞ்சாட்டினர். இதையடுத்து, இவரை பதவி நீக்கம் செய்ய சதித் திட்டம் போட்டனர். இவரது பதவிக் காலம் 2013 வரை உள்ளது. எனவே, பி.சி.சி.ஐ. ஆண்டு பொதுக்கூட்டத்தில் புதிய திருத்தம் ஒன்றைக் கொண்டு வர முடிவு செய்தனர்.

இதன் படி ஐ.பி.எல். தலைவர் பதவி முற்றிலும் இரத்துச் செய்யப்படுகிறது. பி.சி.சி.ஐ., தலைவரே ஐ.பி.எல். தலைவர் பதவியையும் கூடுதலாக வகிக்கும் வகையில் திருத்தம் செய்யப்படுவதாகக் கூறப்பட்டது.

இது குறித்து பி.சி.சி.ஐ. அதிகாரியொருவர் கூறுகையில்;

'ஐ.பி.எல். தொடரை பி.சி.சி.ஐ. தான் நடத்துகிறது. எனவே, பி.சி.சி.ஐ. தலைவர்தான் இதன் தலைவர் பொறுப்பையும் வகிக்க வேண்டும். இதற்காக மோடிக்கு தொடர்பே இல்லை என்று கூற முடியாது. இவர் தலைமை பொறுப்பிலிருக்கக் கூடாது' என்றார்.

யார் காரணம்;

சமீபத்தில் ராஜஸ்தான் கிரிக்கெட்சபைத் தலைவர் தேர்தலில் தோல்வியடைந்த மோடி தற்போது ஐ.பி.எல்.பதவியையும் இழக்கும் நிலையிலிருக்கிறார். இவரை நீக்கும் முயற்சியில் பி.சி.சி.ஐ. தலைவர் சஷான்க் மனோகர், செயலர் சீனிவாசன், காஷ்மீர் கிரிக்கெட்சபைத் தலைவரும் மத்திய அமைச்சருமான பரூக் அப்துல்லா ஆகியோர் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

இதில் பி.சி.சி.ஐ.செயலர் சீனிவாசன் தான் முன்னிலையிலிருப்பதாக தெரிகிறது.

உதாரணமாக தென்னாபிரிக்காவில் நடந்த இரண்டாவது ஐ.பி.எல்.தொடரின் போது ஐ.எம்.ஜி.நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை பி.சி.சி.ஐ.திடீரென இரத்துச் செய்தது. இதற்கு ஐ.பி.எல். தரப்பில் ஏழு அணிகள் மோடிக்கு ஆதரவாகக் குரல் எழுப்பின. ஆனால், சீனிவாசன் உரிமையாளராக உள்ள சென்னை சுப்ப கிங்ஸ் மட்டும் கடிதம் அனுப்பவில்லை.

தனக்கு எதிராக சதி நடப்பதை உணர்ந்த மோடி சமீபத்தில் கொல்கத்தா சென்றபோது பி.சி.சி.ஐ.முன்னாள் தலைவர் டால்மியாவை சந்தித்து மனம்விட்டு பேசியுள்ளார். இக்கட்டான நேரத்தில் இவரது உதவியை நாடியுள்ளதாக தெரிகிறது.

எல்லாம் பணம்;

லலித் மோடிக்கு எதிரான சதி குறித்து இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் மணிந்தர் சிங் கூறுகையில்;

"ஐ.பி.எல்.அமைப்பு உருவாகக் காரணமாக இருந்தவர் மோடி. இவரது வளர்ச்சி மற்றவர்களுக்கு பிடிக்கவில்லை. இவ்வமைப்பில் நிறையப் பணம் புழங்குவது தான் பிரச்சினைக்குக் காரணம். கொள்ளை இலாபத்தை மற்றவர்களுடன் மோடி பகிர்ந்து கொள்ளவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரை இது தவறான செயல். இவருக்குப் பாடம் கற்பிக்கவே சிலர் எதிராகக் களமிறங்கியுள்ளனர். இதிலிருந்து தப்பிவிடுவார் என எண்ணுகிறேன்" என்றார்.

இந்த நிலையில், மோடி 2012 ஆம் ஆண்டு வரை ஐ.பி.எல்.தலைவராயிருப்பாரென அறிவிக்கப்பட்டுள்ளதால் மோடியுடன் மோதியவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.




## அன்பைப் பெற்ற ஆட்டக் காரரர்



இளம் இந்திய அணியின் (19 வயதுக்குட்பட்ட) கப்டனாக இருந்தவர் விராத் கோஹ்லி. இவர் தலைமையில் 2008 மார்ச்சில் இந்திய அணி 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணத்தை வென்று சாதித்தது. அதன் பின் இவர் காட்டில் மழைதான். ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியில் ஏலம் எடுக்கப்பட்டார். தொடர்ந்து ஏறு முகத்திலிருந்து வந்த இவருக்கு 2008 ஆகஸ்டில் இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் இந்திய அணியில் வாய்ப்புக் கிடைத்தது.

அணியில் இவர் சாதிக்கின்றாரோ, இல்லையோ கப்டன் தோனி உட்பட பலரின் அன்பை முழுமையாகப் பெற்றுவிட்டார். அதனால் தான் பலமுறை சொதப்பிய போதிலும் இவருக்கு அடுத்தடுத்து அணியில் வாய்ப்புக் கிடைக்கிறது. காம்பிருக்கு காயமா?யுவராஜ் சிங்குக்கு காயமா? உடனே அந்த இடத்தை நிரப்ப விராத் கோஹ்லி தான் அழைக்கப்படுவார்.

தற்போதுகூட இலங்கைக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் காயம் காரணமாக யுவராஜ் விளையாடாத நிலையில் கோஹ்லிக்குதான் அதிர்ஷ்டம் அடித்தது. இது குறித்து விராத் கோஹ்லி கூறியதாவது;

நான் கிரிக்கெட் விளையாட வேண்டும் என்பதில் எனது தந்தை தான் அதிக ஆர்வங்கொண்டவராக இருந்தார். கிரிக்கெட் தொடர்பாக என்ன தேவையோ அதனை உடனடியாக நிறைவேற்றித் தருவார். நான் கிரிக்கெட் அகடமியில் இணைந்தது முதல் என்னுடைய வளர்ச்சி அனைத்திலும் அவரது உதவியுள்ளது.

இந்திய 'ஏ' அணி அல்லது 19 வயதுக்குட்பட்ட அணிகளைவிட இந்திய தேசிய அணியில் இணைந்து விளையாடுவதைத் தான் அவர் கனவாகக் கொண்டிருந்தார். ஏனெனில் எவர் ஒருவர் இந்திய அணியில் இணைந்து விளையாடுகிறாரோ அவரைத்தான் மக்கள் கிரிக்கெட் வீரராக ஏற்றுக்கொள்கிறார்கள்.

முதலில் எனது இந்த விருப்பத்தைக் கேட்டு ஏளனம் செய்தவர்கள் ஏராளம். இருப்பினும் இந்திய அணிக்காக விளையாடுவது என்ற குறிக்கோளில் உறுதியாக இருந்தேன். பின் இளம் இந்திய அணிக்கு கப்டனானேன். தற்போது தேசிய அணியில் இடம் கிடைத்துள்ளது.

இந்திய அணிக்காக விளையாடுவது என்ற எனது தந்தையின் கனவு தற்போது நிறைவேறியுள்ளது. ஆனால், இதனைக் காண இப்போது அவர் உயிரோடில்லை. இயற்கையாகவே தன்னம்பிக்கை நிறைந்த நான் வாய்ப்புக் கிடைக்கும் நேரங்களில் தந்தையின் ஆசியுடன் சாதிக்க முயற்சி செய்து வருகிறேன். இலங்கைத் தொடரிலும் இதனை நிறைவேற்றுவேன் என்ற நம்பிக்கையுள்ளதாகத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மந்திர வித்தையால் 40 தையல் ஊசிகளை குழந்தையின் உடலுக்குள் செலுத்திய வளர்ப்புத் தந்தை

பிரேசிலில் குழந்தையொன்றின் உடலின் உட்பகுதியில் 40 தையல் ஊசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை அந்நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

மதச் சடங்கு என்ற மந்திர வித்தையொன்றின் மூலம் இக் குழந்தையின் வளர்ப்புத் தந்தை இவ் ஊசிகளை வேண்டுமென்றே குழந்தையின் உடலில் செலுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இந்த இரண்டு வயது சிறுவனின் உடலில் ஊசிகளை ஏற்றியமையை ரொபேர்டோ கார்லொஸ் மாகல் ஹேஸ் என்னும் இந்நபர் ஒப்புக் கொண்டுள்ளார்.

தனது மனைவியை பழி வாங்குவதற்காக குழந்தையை மதச் சடங்கொன்றின் மூலமாக கொலை செய்யுமாறு தனது எஜமானி தனக்குக் கூறியதாக ரொபேர்டோ கார்லொஸ் கூறுகிறார்.

சுமார் 5 சென்ரி மீற்றர் நீளமுடைய இவ் ஊசிகளை அகற்றும் முயற்சிகளில் மருத்துவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

வாந்தி மற்றும் வயிற்று வலியால் குழந்தை துடித்ததைத் தொடர்ந்தே குழந்தையின் தாயார் குழந்தையை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற பின்னரே இவ் விடயம் அம்பலமாகியுள்ளது.

குழந்தையின் கழுத்து மற்றும் கால்களின் உட்பக்கம், நுரையீரல் என்பவற்றில் இவ்



ஊசிகள் குத்திக் கொண்டிருப்பதை எக்ஸ்-ரே கதிர்கள் வெளிப்படுத்தியுள்ளன.

தாம் வசிக்கும் வீட்டில் சந்தேகத்திற்கிடமான பொருட்களைத் தான் கண்டதைத் தொடர்ந்தே ரொபேர்டோ கார்லொஸ் ஏதோ மந்திர தந்திர சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளாரென தான் சந்தேகித்ததாக குழந்தையின் தாயார் பொலிஸிடம் கூறியுள்ளார்.

பெருமளவான ஊசிகள் அகற்றக் கூடியதாக இருக்கின்ற போதிலும் நுரையீரலில் குத்தியுள்ள ஊசியினை அகற்றுவதில் பக்கவிளைவுகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக மருத்துவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மற்றொரு அதிசயம் என்னவெனில் ஊசிகள் ஏற்றப்பட்டமைக்கான எந்தவொரு அடையாளமும் குழந்தையின் உடலில் இல்லையென மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இக்குழந்தை ஆபத்தான நிலையில் இருந்ததாகவும் ஆனால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குழந்தையின் நிலையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக் குழந்தையின் உடலில் 50 ஊசிகள் இருப்பதாக முன்னர் தெரிவிக்கப்பட்ட போதும் எக்ஸ்-ரே மதிப்பீடுகளில் 40 ஊசிகளே இருப்பது தெரியவந்துள்ளது.

இக் குழந்தையின் தாயாருக்கு ஏற்கனவே ஆறு குழந்தைகள் இருக்கின்றன என்பதும் ரொபேர்டோ கார்லொஸை திருமணம் முடித்து ஆறு மாதங்கள் ஆகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி

# ஆண் குழந்தைக்கு தாயானார் புட்டினின் ஜிம்னாஸ்டிக் காதலி

## புட்டினின் முதலாவது ஆண் வாரிசு?

ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புட்டினின் காதலியாகக் கருதப்படும் அலினா கபேவா ஆண் குழந்தையொன்றுக்குத் தாயாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் குழந்தையே புட்டினின் முதலாவது ஆண் வாரிசாக இருக்கலாமெனவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உலகப் புகழ்பெற்ற ஜிம்னாஸ்டிக் வீராங்கனையான கபேவா மொஸ்கோவில் குழந்தையைப் பிரசவித்துள்ளதாகவும் அதற்கு டிமித்ரி எனப் பெயரிடப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இரண்டு ஒலிம்பிக் பதக்கங்களையும் 18 உலக சம்பியன் பதக்கங்களையும் வென்று ஜிம்னாஸ்டிக் வரலாற்றை அலங்கரித்துள்ள 26 வயதான கபேவா போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரே புட்டினின் காதலியாக அடையாளம் காணப்பட்டார்.

57 வயதான புட்டின் கபேவாவை திருமணம் முடிப்பதற்காக மனைவி லுட்மிலாவை விவகாரத்துச் செய்துள்ளதாகவும் செய்தியொன்று வெளிவந்துள்ளது.

புட்டினுக்கு ஏற்கனவே இரண்டு மகள்கள் உள்ளனர்.

இந்நிலையில்,தான் நிறையக் குழந்தைகளுக்குத் தாயாக இருக்க விரும்புவதாக கபேவா நண்பர்களிடம் கூறியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கபேவா ஆண் குழந்தைக்குத் தாயான செய்தியை ரஷ்ய ஊடகங்கள் மட்டுமல்லாமல் உலகெங்கிலுமுள்ள ஊடகங்கள் முன்னுரிமை கொடுத்து வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 46,200 தொன் $CO_2$வை வெளியேற்றிய கொபன்ஹேகன் காலநிலை மாற்ற மாநாடு

காலநிலை மாற்றத்தால் ஏற்படப் போகும் பேரழிவுகளைத் தடுத்து நிறுத்துவது தொடர்பில் ஆராயும் ஐ.நா.வின் கொபன் ஹேகன் மாநாடு 46,200 தொன் பசுமை இல்ல வாயுவை ($Co_2$) வெளியேற்றியுள்ளதாக ஆய்வொன்று தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பில் இது வரை நடந்த மாநாடுகளிலேயே கொபன் ஹேகன் மாநாட்டிலேயே அதிகளவில் இவ் வாயு வெளியேற்றப்பட்டுள்ளது.

சுமார் 192 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், பேச்சாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக நல அமைப்பினர் மற்றும் பார்வையாளர்களென கொபன்ஹேகனில் ஆயிரக்கணக்கானோர் கூடியுள்ளனர்.

இம் மாநாடு கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை நடைபெற்றது.

பல நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கொபன்ஹேகனுக்கு விரைந்ததால் பெருமளவான விமானங்கள் இந் நகரை வந்தடைந்தன. இந்த விமானங்களின் புகை மூலமே மேற்குறிப்பிட்ட தொகையிலான பசுமை இல்ல வாயு ($Co_2$) வெளியேற்றப்பட்டுள்ளது.

இந்த வாயுவைக் கொண்டு 10 ஆயிரம் நீச்சல் குளங்களை நிரப்ப முடியுமென்றும் இது ஆண்டுக்கு 2300 அமெரிக்கர்கள் வெளியிடும் வாயுவிற்கு சமமானது என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இம் மாநாட்டின் மூலம் 5700 தொன் வாயுவும் விமானங்களின் போக்குவரத்து மூலம் 40,500 தொன் வாயுவும் வெளியாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆய்வை மேற்கொண்ட நிறுவனத்தின் அதிகாரியொருவர் கூறுகையில்;

கியோட்டா மாநாட்டில் இந்தளவுக்குப் பசுமை இல்ல வாயு வெளியேற்றப்படவில்லை. ஆனால், இந்த முறை மிகப் பெரியளவில் மக்கள் கூடியுள்ளதால் இவ் வாயு வெளியேற்றமும் அதிகமாக உள்ளது. நாளொன்றுக்குக் குறைந்தது 18 ஆயிரம் பேர் மாநாட்டில் பங்கேற்கின்றனர். இது ஆரம்ப கட்ட புள்ளி விபரம் தான். மாநாட்டின் நிறைவில் இது மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.



சீனாவில் எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 26 ஆவது பனிச் சிற்பக் கண்காட்சிகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள பனிச்சிற்பம் ஒன்றைக் காண் கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.





# 25 வருடங்களில் தோன்றிய 30 புதிய நாடுகள்

உலகில் கடந்த 25 வருடங்களில் 30 புதிய நாடுகள் உருவாகியிருக்கின்றன. 1990 ஆம் ஆண்டுக்குப் பிறகு உலக வரைபடத்தை அடிக்கடி மாற்றியமைக்க வேண்டியேற்பட்டது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னரான உலகவரைபடம் இப்போது பயனற்றதாகப் போய்விட்டது. 1991 வரை உலகின் ஆறில் ஒரு பங்கு நிலப்பரப்பில் அகலக்கால் பதித்து நின்ற சோவியத் யூனியன் சிதைந்து போனமை பல நாடுகள் புதிதாகத் தோன்றுவதற்குக் காரணமாகியது.

சோவியத்தின் சிதைவுக்குப் பிறகு புதிய 15 நாடுகள் உருவாகின. ரஷ்யா உட்பட ஆர்மேனியாவில் இருந்து உஸ்பெகில்தான் வரை பல சிறியநாடுகள் இதில் அடங்கும்.

சோவியத் யூனியன் சிதைவடைந்து பேர்லின் சுவரும் தகர்ந்து போனதன் பின்னர் இரும்புத் திரைக்குப் பின்னால் இருந்த பிராந்தியங்களில் தொடர்ச்சியான பல மாறுதல்கள் ஏற்பட்டன. பால்கன் பிராந்திய நாடுகளே இதில் முதலில் பாதிப்புற்றன. கடுமையான இனப்பிளவினால் சின்னாபின்னமாகிய பால்கனில் முன்னாள் யூகோஸ்லாவியா 5 புதிய நாடுகளாகப் பிரிந்தது. சுலோவேனியா, பொஸ்னியா-ஹெர்சோகோவினா, சேர்பியா-மொன்ரிநீகிரோ, குரோஷியா மற்றும் மசெடோனியா ஆகியவையே அந்த நாடுகளாகும்.

செக்கோஸ்லவாக்கியாவும் செக். குடியரசாகவும் ஸ்லவோக்கியாவாகவும் பிரிந்தது. இந்தப்பிரிவினை குழப்பநிலை எதுவும் தோன்றாமலேயே இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் 1990 ஆம் ஆண்டில் மீண்டும் இணைந்து ஒரே நாடாகிக் கொண்டன.

தேச எல்லைகள் மீள்வரைவு ஐரோப்பாவில் மாத்திரம் நிகழவில்லை. ஆபிரிக்காவில் 1990 ஆம் ஆண்டில் நமீபியா தென்னாபிரிக்காவில் இருந்து சுதந்திரமடைந்தது. அதேவருடம் வடயேமனும் தென்யேமனும் இணைந்து ஒரேநாடாகின. 1993 ஆம் ஆண்டு எரித்திரியா எதியோப்பியாவில் இருந்து சுதந்திரம் பெற்றது. 2002 ஆம் ஆண்டில் கிழக்குத் திமோர் இந்தோனேஷியாவிலிருந்து விடுபட்டு சுதந்திர நாடாகியது. 1990 களில் சிறிய தீவுக்கூட்ட நாடுகளான மார்ஷால் தீவுகள், மைக்ரோனேசியா, பாலோ ஆகியவை அமெரிக்காவின் பரிபாலனத்தில் இருந்து விடுபட்டுக் கொண்டன.

பால்கன் பிரதேசத்தில் புதிய நாடுகளின் தோற்றம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. 2006 ஆம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பொன்றையடுத்து சேர்பியாவில் இருந்து மொன்ரிநீக்ரோ பிரிந்து சென்றது. கொசோவோ கடந்த வருட ஆரம்பத்தில் சுதந்திர நாடாகியது. கடந்த 25 வருடங்களில் 30 புதிய நாடுகள் உருவானதை உலகம் கண்டது.

ஐக்கிய நாடுகள் சபையில் தற்போது 192 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த எண்ணிக்கை நீண்ட காலத்துக்கு நிலையானதாக இருக்கப்போவதில்லை என்பது நிச்சயம். புதிய நாடுகள் தோன்றிக் கொண்டேயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி 336ஆம் இலக்கத்தில் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.